பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 11 | திங்கட்கிழமை 27.11.2017 | கதிர் 22

## மாத்தறைப் பகுதியில் இரு பெண்கள் கொலை

மாத்தறை, நவிமான பகுதியில்குழுஒன்றினால்படுகொலை செய்யப்பட்டவர்கள் எனக் கருதப்படும் இரு பெண்களின் சடலங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் பல்வேறு கோணங்களில் சந்தேகங்கள் காணப்படுகின்றன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பேரெழுச்சியுடன் இன்று மாவீரர் தினம் தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிப்பு



எஸ் .நிதர்ஷன்

யாழ்ப்பாணம், நவம்பர் 27

மாவீரர் தினமான இன்று நீண்ட காலத்தின் பின்னர் தமிழர் தாயகம் எங்கும் தமிழ் மக்கள் பேரெழுச்சியுடன் ஒன்று கூடி, தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

இன்று மாலை 6.05 க்கு தாயகமெங்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் சுடரேற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

பக்கம் 18



## பிரபாகரனின் வீட்டில் நேற்று கோலாகலமான பிறந்த நாள்

### வடக்கு – கிழக்கு எங்கும் கொண்டாட்டங்கள்



யாழ்ப்பாணம், நவ.27

தமிழீழத்தேசியத்தலைவர் வேலுப்பிள்ளைபிரபாகரனின் 63ஆவது பிறந்ததினம் அவரது பூர்வீக இல்லத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வை வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையேற்று நடத்தினார்.

பக்கம் 18

## பிரபா பிறந்த தின நிகழ்வால் வவுனியா வளாகத்தில் குழப்பம்

வவுனியா, நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 63ஆவது பிறந்த நாள் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் கேக் வெட்டிகொண்டாடப்பட்டது. இதனை அடுத்து அங்கு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பம்பைமடு விடுதியில் தங்கியுள்ள முதலாம் வருட

பக்கம் 18

## துயிலும் இல்லம் அருகே இராணுவத்தினர் குவிப்பு

### கோப்பாயில் நேற்றுப் பதற்ற நிலை

யாழ்ப்பாணம்,நவ. 27

கோப்பாய்மாவீரர்துயிலும் இல்லப் பகுதியைத் துப்புரவு செய்யும் பணியில் பொதுமக்கள் நேற்று ஈடுபட்டனர். இதன்போது அந்தப் பகுதியில் பெரு

பக்கம் 18



## இணைப்புக் குறித்து இருந்து பேசுவோம்!

### முஸ்லிம் தலைமைகளுக்கு அழைப்பு சம்மாந்துறையில் சம்பந்தன் விடுப்பு

சம்மாந்துறை, நவ. 27

“அதிகாரப் பரவலாக்கல் அலகு குறித்தும் இணைந்த வடக்கு, கிழக்குக் குறித்தும் தமிழ் சமூகமும், முஸ்லிம் சமூகமும் கருத்து வேறுபாடுகளின்றி திருப்தியடையக்கூடிய வகையில் இருந்து பேசி, ஒரு முடிவைஎட்டவேண்டும். அதற்கு முன் வருமாறு முஸ்லிம் மக்களுக்கும் முஸ

பக்கம் 18






## யாழ். பல்கலையில் நேற்று பிரபாகரனின் பிறந்த தினம்



யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 63 ஆவது பிறந்த தினம் யாழ்ப்பா

பக்கம் 18

## கனடா செல்ல முயன்றனர் என 26 தமிழர்கள் புத்தளத்தில் கைது

### யாழ்., மட்டு., திருமலையைச் சேர்ந்தோர்

கொழும்பு, நவ. 27

சட்டவிரோதமாகக் கனடாவுக்குச் செல்ல முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 26 பேர் புத்தளத்தில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார்

பக்கம் 18


## வடக்கு முழுவதும் நாளை இ.போ.ச. சேவை இல்லை

### தொழிற்சங்க நடவடிக்கையில் ஊழியர்கள் குதிப்பதால்

யாழ்ப்பாணம், நவ. 27

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் வடக்கு மாகாணம் முழுவதும் நாளை செவ்வாய்கிழமை இடம்பெறாது என அறிவிக்கப்

பக்கம் 18



# மத்தியிலும் மாகாணத்திலும் அதிகாரங்களை பகிரும் ஆட்சிமுறையையே எதிர்பார்க்கிறோம்

## சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்



மத்தியிலும், மாகாணத்திலும் காணப்படும் நிறுவனங்களில் அதிகாரத்தை பிரயோகிக்கக் கூடியதான ஓர் ஆட்சி முறையுடனான ஒருமித்த நாடு. இதுவே எமது எதிர்பார்ப்பாகும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந் திரன் தெரிவித்தார்.

அரசமைப்புத் தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தும் கூட்டம் கல்முனை நால்வர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிங்களசிவில் சமூகம் அரசமைப்பைக் கொண்டுவருவதற்குப் பாடுபடுகின்றது. இது பற்றி தமிழ் பத்திரிகையில் வருவதில்லை. புதிய அரசமைப்பு வேண்டாம் என்று சொன்னால் அதனை பெரிதாக்கி போடுகின்றனர்.

அரசமைப்பு சபையூடாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எல்லாம் அனைத்துத் தரப்பினராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஆகும். இடைக்கால அறிக்கையின் அறிமுகத்திலே பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அதனைக்கூடப் படிக்காதவர்கள் இன்று இவ்வறிக்கை தொடர்பாகப் பல குறைபாடுகளை முன்வைக்கின்றனர்.

இதனை பேராசிரியர்கள் உள்ளடங்கிய நிபுணர்குழுவும் கூறுகின்றது. இதில் சட்டம், ஒழுங்கு இல்லை என்று கூறியுள்ளனர். அது இந்த அறிக்கையின் அறிமுகத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இது இறுதியான முழுமையான அறிக்கையல்ல. அறிமுகத்தைக் கூட படித்து பார்க்காதவர்கள் இதனை பிழையென எவ்வாறு கூறுவது? அது நியாயமானதல்ல.

எங்களுக்கு மிக முக்கியமானதொன்று. இதனை நாங்கள் சரியாகக் கவனிக்க வேண்டும். ஒன்றையாட்சி என்ற பதம் 1947 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டதாகும். இதற்குத் தற்போது மாறுபட்ட அர்த்தங்களும் கற்பிக்கப்படுகின்றன.

எமது கட்சியின் கொள்கை யாதெனில் அதிகாரங்கள் ஓர் இடத்தில் குவிக்கப்படக் கூடாது என்பதாகும். ஒற்றையாட்சி என்ற சொல்லின் பதம் காலப் போக்கில் மாற்றமடைந்துள்ளது. இதனை இலங்கை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

'ஏகியராட்சிய'' என்பது பிரிக்க முடியாத ஒருமித்த நாடு என்பது பொருளாகும். உப குழு அறிக்கையில் சட்டவாக்க மொழி மூன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது சமவலுவுடையதாக இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத்தியிலும், மாகாணத்திலும் காணப்படும் நிறுவனங்களில் அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடியதான ஆட்சிமுறை ஒன்றைக் கொண்ட ஒருமித்த நாடு. இதில் பாதுகாப்பு தொடக்கம் அனைத்து விடயங்களும் அடங்கும். அதுவே எமது எதிர்பார்ப்பாகும்.

இன்று அரசு தொடர்பில் பலதரப்பட்ட விமர்சனங்கள் எழுந்துள்ளன. அந்தவகையில், அரசு தற்போது ஆட்டம் கண்டுள்ளதாகவும் கூறுப்படுகின்றது.

அதனைப்பற்றி சிந்திக்கத் தேவையில்லை. சர்வதேசத்தின் அறிவுரைகள் எமக்கு என்றும் உள்ளன. எமது கோரிக்கையை நிறைவேற்றுவதே எமது நோக்கம். பொய்யான பிரசாரங்களுக்கு மக்கள் செவிசாய்க்கவேண்டாம். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப்புலிகளின் தங்கத்தை முல்லைத்தீவில் தேடும் பொலிஸார்!



முல்லைத்தீவு, நவ. 27

விடுதலைப்புலிகளின்தங்கம்புதைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து முல்லைத்தீவில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், நீதிபதியின் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் நடைபெற்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - சுதந்திரபுரம் நிரோஜன் மைதானத்திலேயே இவ்வாறு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## முல்லையில் உள்ளக விளையாட்டு அரங்கம்; நிர்மாணப்பணிக்கு ரூ. ஒரு கோடி ஒதுக்கீடு

வவுனியா, நவ. 27

முல்லை மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்க வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தால் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லை மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் 2018ஆம் ஆண்டுக்கான ஒரு கோடி ரூபாய் மாகாண உட்கட்டுமான நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு 2018 தை மாதம் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட ஏற்பாடாகி வருகின்றது.

ஏற்கனவே, முல்லை மாவட்ட செயலகத்தின் முன்பாக நகர விளையாட்டு மைதானத்தின் அருகில் விளையாட்டுத்திணைக்களத்திற்கு பிரதேச செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கையளிக்கப்பட்ட காணியில், பூப்பந்து மற்றும் கரப்பந்து, கபடி, கராத்தே, குத்துச்சண்டை இன்னும் பல போட்டிகள் நடத்தக் கூடியதாகவும் பயிற்சியை மேற்கொள்ளக் கூடியதாகவும் இவ் உள்ளக விளையாட்டு அரங்கம் அமையவுள்ளது.

ஏற்கனவே, கடந்த காலத்தில் 2013 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபா உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு கோடி ரூபா செலவில் உள்ளக விளையாட்டு அரங்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடாகி இருந்தன.

இந்த நிலையில், இடையூறுகள் கால தாமதம் காரணமாக மன்னார் மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கிற்கு நிதியுதவி மாற்றம் செய்யப்பட்டது.

மீண்டும் விடா முயற்சி காரணமாக மாகாணவிளையாட்டுதிணைக் களத்தால் 2018ஆம் ஆண்டுக் கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடாகி வருகின்றன.

இந்த உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதன்மூலம் மாவட்டத்தின் உள்ளக விளையாட்டு அரங்கம் இல்லை என்ற குறையை நீக்குவதுடன் பாடசாலை மற்றும் கழக வீரர்களுக்கான போட்டி நடத்துவதுடன் பயிற்சியைப் பெற முடியும்.

இப்போட்டிகளை நடத்துவதற்குத் தற்சமயம் கேப்பாபிலவு மற்றும் ஒட்டிசுட்டான் இராணுவ முகாமில் உள்ள உள்ளக அரங்கையே பெரும்பாலும் மாணவர்கள், ஏனைய விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-100)

## எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை புதிய அரசமைப்புக்கு எதிராக பயன்படுத்த வேண்டும்!

**நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவிப்பு**

கொழும்பு நவ. 27

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை புதிய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான சர்வஜன வாக்கெடுப்பாகப் பயன்படுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்- எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தவறான தீர்மானத்தை எடுத்தால் பிரிவினைவாத அரசமைப்புச் சட்டத்தை அரசு கொண்டு வரும் என்றார்.

## இந்தியாவிலும் சிறப்பாக இடம்பெற்றது பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம்!





கொழும்பு, நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியாவிலும் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில், நாம் தமிழர் கட்சியினரால் ஈரோட்டில் வீதியோரம் வசிக்கும் ஆதரவற்றோருக்கு போர்வைகளும், ரொட்டியும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் சார்பாக பட்டுக் கோட்டை நகராட்சி பள்ளி நூலகத்திற்கு நூல்கள் வழங்கப்பட்டமையுடன், பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்புக்களும் வழங்கப்பட்டன.

# யாழ். பல்கலைக் கழகத்துள் மாவீரர் நாள் சுவரொட்டிகள்




யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ மாவீரர் நாள் 2017 இன்று திங்கள்கிழமை தாயகமெங்கும்கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் அது தொடர்பான சுவரொட்டிகள் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்துக்குள் நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

தமிழீழத் தேசியத் தலைவர் முதன்மைச் சுடரேற்றி மாவீரர்களுக்கு அகவணக்கம்செலுத்தும்ஒளிப்படத்தைத்தாங்கியதாக அந்தச் சுவரொட்டிகள் அமைந்துள்ளன.




# சு.க. - கூட்டு எதிரணி இடையே தொடர்ந்து சமரச எத்தனம்

கொழும்பு, நவ.27

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அதனுடன் முரண்பட்டு கூட்டு எதிரணியில் நிற்கும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணிக்கும் இடையில் தொடர்ந்து இன்றும் சமரசப் பேச்சுகள் இடம்பெறும் எனத் தெரிகின்றது.

நேற்று முன்தினம் இரவு இரு தரப்புகளிலும் உள்ள விசேட பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

இரு தரப்பினரது யோசனைகள் தொடர்பிலும் நேற்று முன்தினம் இரவு நீண்ட பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் முன்வைத்த யோசனைகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி இன்று இடம்பெறவுள்ள சந்திப்பில் இது குறித்து தொடர்ந்தும் பேசுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இக் கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரதிநிதி ஒருவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சுதந்திரக்கட்சி இணைந்து அரசு அமைத்துச் செயற்படுவதால் சுதந்திரக் கட்சியுடன் ஒன்றாகச் செயற்படுவதில் தங்களுக்குள் சிக்கல் காணப்படுவதாக கூட்டு எதிரணிப்பிரமுகர்மேலும்குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய இணக்கப்பாடு எட்டப்படுமானால் எதிர்வரும் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து பார்க்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட 70 அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம்

கொழும்பு, நவ. 27

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு70அரசியல்கட்சிகளுக்கு அங்கீகாரமளிக்கப்படுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 5 ஆண்டுகளாக வரிப் பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்களுக்குத் தடை

5 ஆண்டுகளாக வாகன வரி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்காத வாகனங்களுக்குத் தடை விதிப்பதற்கானபுதியநடைமுறை அடுத்த மாதம் அறிமுகப்படுத்த உள்ளதாகமோட்டார்போக்குவரத்துத்திணைக்கள அதிகாரி ஜெகத் சந்திரசிறி தெரிவித்தார்.

இதுதொடர்பில்போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வாகன வரி அனுமதிப்பத்திரத்தை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் புதுப்பிக்காதுவிடின் தடை செய்யப்படும் நடைமுறை தற்போது பின்பற்றப்படுகின்றது. எனினும், தண்டம் அறவீடு செய்வதன் ஊடாக அவற்றுக்கு அனுமதிபுதுப்பிக்கப்படுகின்றன.

இந்த நிலையில், புதிதாக வரும்நடைமுறைக்குஅமைவாக 5 ஆண்டுகள் வரி அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்படாத வாகனங்களுக்கு அதனை ஒரு போதும் புதுப்பிக்க முடியாது. அவ்வாறான வாகனங்களைப் பயன்படுத்த முடியாமல் தடை விதிக்கப்படும்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மாகாண அலுவலகங்கள்மற்றும்மாகாண சபைகளிடமிருந்து கிடைத்த அறிக்கைகளின் பிரகாரம் பல வாகனங்கள் 10 தொடக்கம் 15 ஆண்டுகளாகஅனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை தோல்வியடைந்தவர்களே இவ்வாறு அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்காது உள்ளனர்.

புதிய ஒழுங்குமுறை நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக, தங்கள் வரி உரிமங்களைப் புதுப்பிக்காதவர்கள் உடனடியாக அதைச் செய்ய வேண்டும். இல்லையெனில் வாகனத்துக்கான உரிமங்கள் இரத்துச் செய்யப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி ஜெகத் சந்திரசிறி மேலும் கூறினார்.

# ஐ.தே.க. - கூட்டமைப்பு இடையே இரகசிய ஒப்பந்தம் ஏதுவுமில்லை

## எரான் விக்கிரமரத்ன விளக்கம்

கொழும்பு, நவ. 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க இரகசியப்பேச்சுஇடம்பெறுவதாகவெளியாகியுள்ள செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்னவிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து புதிய ஆட்சியமைப்பது குறித்து வெளியாகும் செய்திகளில் எதுவித உண்மையுமில்லை.

இவ்வாறான எந்த இரகசிய ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்படவில்லை. கூட்டரசுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமதுஆதரவைவழங்கியுள்ளது. எனினும்எதிர்காலத்தில்அரசுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக அக்கட்சியே தொடர்ந்து தீர்மானிக்கும் – என்றார்.

# ஊரெழுவில் கடைக்குள் புகுந்து நேற்றுத் தாக்குதல்




யாழ்ப்பாணம் – ஊரெழுப் பகுதியில்நேற்றுமாலை 5 மணியளவில் மூடியிருந்த ஸ்டுடியோ ஒன்றைஓட்டோவில் வந்த மூவர் தட்டித் திறப்பித் தனர். உள்ளே நுழைந்த இருவரில் ஒருவர் அங்கு வேலை செய்து கொண்டிருந்த ரவிக்குமார் என்ற இளைஞரைக் கடுமையாகத் தாக்கித் திட்டி விட்டு சாவகசமாக ஓட்டோவில் ஏறிப் புறப்பட்டுச் சென் றனர்.

மதுபோதையில், ‘ஏபிஸி 5197’ என்ற வடபகுதி பதிவிலக்கத்தைக் கொண்ட ஓட்டோவில் வந்த இவர்கள், தம்மை சுன்னாகம் பொலிஸ் சி.ஐ.டியினர் என்று கூறியே அந்த இளைஞரைத் தாக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்டுடியோவின் கண்காணிப்புக் கமராவில் இவர்களது அட்டகாசம் பதிவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்துபொலிஸில்முறைப்பாடு செய்யப்பட்டிருப்ப தாகக் கூறப்பட்டது. (உ)

# இணைப்புக்...

(பதினெட்டாம்பக்கத்தொடர்ச்சி)

கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் இடம்பெற்றன. வடக்கு – கிழக்கு மாகாணம், தென் கிழக்கு மாகாணம் என்றொல்லாம் நாம் பல ஆரம்ப முடிவுகளைச் செய்தோம்.

சந்திரிகா அரசு 2000 இல் சமர்ப்பித்த அரசமைப்புத்திட்டத்தில் அவை உள்ளன.

இன்று ஒரு புதிய அரசமைப்பு ஏற்பாடு வருகின்றபோது நாங்களும், முஸ்லிம் மக்களும் நிரந்தரமான ஒரு முடிவை எடுத்து எவருக்கும் பாதிப்பில்லாமல், இரு தரப்பினரும் முழுமையாகத் திருப்தியடைக்கூடிய வகையில் ஓர் இணக்கத்துக்கு வர வேண்டும்.

முஸ்லிம் மக்களுக்கு என்ன வேண்டும்? தமிழ் மக்கள் ஏன் இணைப்பைக் கேட்கின்றார்கள்.?

இந்த நாட்டில் தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் இடங்களில் அவர்கள் நிரந்தரமாக, உறுதியாக இருக்க வேண்டும். நிரந்தரமாக ஆட்சி புரியக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். எவ்வித பாதிப்புக்கும் அவர்கள் இலக்காகக் கூடாது. வன்முறை அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டாலும் கூட, அதை எதிர்நோக்கக்கூடிய ஒரு வல்லமை அவர்களுக்கு இருக்க வேண்டும். அவர்கள் இடையே ஒற்றுமை இருக்க வேண்டும்.

நாம் பெரும்பான்மை இனத்தைக் குறை கூறவில்லை. அவர்களை நாங்கள் மதிக்காமல் இருக்க முடியாது.

அதேமசயம் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழ்ப் பேசும் மக்களும் மதிக்கப்பட வேண்டும்.

அதற்கு சில விசேடமான ஒழுங்குகள்தேவை. அவற்றைச் செய்யும் போது அவை தமிழ் மக்களுக்கும் திருப்தியாக இருக்க வேண்டும், முஸ்லிம் மக்களுக்கும் திருப்தியாக இருக்க வேண்டும். சிங்கள மக்களுக்கும் எவ்விதமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது.

இந்தச் செய்தியை முஸ்லிம் தலைவர்களுக்கும் முஸ்லிம் மக்களும் விடுக்க விரும்புகிறேன்.

இந்த விடயங்கள் எம் பிரதேசத்தில் பிற்சந்ததியின் நிரந்தரமான பாதுகாப்பு, நிரந்தமான உரிமைகள் சம்பந்தப்பட்டது. அதனை உறுதிப்படுத்துவதற்காக நாம் அமர்ந்திருந்து பேசுவோம். ஒருவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் – எல்லோருக்கும் திருப்தி தருகின்ற – ஒரு முடிவை எட்டுவோம். வாருங்கள்! – என்றார் சம்பந்தன். (உ)

## 16 வயதுச் சிறுமி மீது கூட்டு வன்புணர்வு

# வவுனியா நகரில் நாளை காலை மகளிர் அமைப்பு ஆர்ப்பாட்டம்

வவுனியாவில் 16 வயதுச் சிறுமி ஓட்டோவில் கடத்தப்பட்டு ஐவரினால்கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து –

மகளிர் அபிவிருத்தி நிலையம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு, வவுனியா மணிக் கூட்டுக் கோபுரம் அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இது தொடர்பில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் –

வவுனியாவில் நவம்பர் 14 ஆம் திகதி 16 வயதுச் சிறுமி ஒருவர் ஓட்டோவில் கடத்தப்பட்டு ஐவரினால் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு, பெண்கள் அச்சமின்றி நடமாடும் சூழ்நிலையை கேள்விக்குறியாக்கியுள்ளது. வித்யா, வைஷ்ணவி அவர்களைத் தொடர்ந்து ஆங்காங்கே தொடர் சம்பவங்களாக இவ்வாறான வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமையும், தொடர்ந்து அப்பெண்கள் பலியாக்கப்படுவதும் எமது சமூகத்தின் இழிவு நிலையைக் காட்டி நிற்கின்றது. இவற்றை தகுந்த முறையில்கேள்விக்குட்படுத்துவதுஎமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

இந்தக் கொடுமைகளைக் கண்டித்தும், இவ்வாறான இழிவான சம்பவங்கள் மேலும் மேலும் இடம்பெறாது இருப்பதை வலியுறுத்தியும் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.நாளையஆர்ப்பாட்டத்தில் வவுனியா, புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம் சார் மகளிர் அமைப்புக்களைச்சார்ந்தோர் கலந்து கொள்வதோடு மகஜர் ஒன்றும் அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது. – என்றுள்ளது. (இ)

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாவீரருக்கு நம் கைம்மாறு யாது?

**இன்று மாவீரர்கள் தினம்.**

**தமிழர் தாயக விடுதலைக்காகத் தம்முயிரை ஆகுதியாய் ஈகம் செய்த பல்லாயிரம் வீர மறவர்களைத் தமிழ் மக்கள் தமது மனதில் இருத்தி, பூஜித்து கௌரவிக்கும் உயரிய நாள்.**

**காலத்தின் காவியமாக எமது தேசத்தின் ஆன்மாவில் காலம் எல்லாம் கலந்து நிலைத்திருக்கும் உத்தமர்களை எமது மக்கள் உள்ளத்தில் உயர்த்திப் போற்றும் நாள் இது.**

**இனத்தின் இருப்புக்காகச் சுயத்தையே தொலைத்த மண் பற்றாளர்கள் அவர்கள். தம் இருப்பு நிலையற்றது என்பதை உணர்ந்து, தம் இனத்தின் இருப்புக்காகத் தங்களைத் தொலைத்தவர்கள்.**

**தம் உடலின் சிதறும் கணங்கள் தெரிந்திருந்தும் இன விடுதலை என்ற ஓர் இலக்குக்காக அதனைத் தேடிச் சென்று காற்றோடு கலந்தவர்கள்; கடலின் ஆழத்துக்குள் தம்மைக் கரைத்தவர்கள்; நெருப்பின் சுவாலைக்குள் அக்னியாய்ப் புகுந்து பெரும் வெடிப்புகளை நிகழ்த்தியவர்கள்; வானத்திலும் வல்லாண்மை காட்டி வரலாறானவர்கள் அவர்கள்.**

**இன மாண்புக்காகத் தங்களையே அர்ப்பணித்த தற்கொடையாளர்களை உள்ளத்தில் இருத்தி நாம் பூஜிக்கும் மாண்புமிக்க நாள் இது.**

**ஈடு இணையற்ற ஈகங்கள் இயற்றி, ஒப்புயர்வற்ற தியாகங்களைச் செய்து, எல்லை கடந்த வல்லமைகளைக் காட்டி, அளவற்ற அர்ப்பணிப்புகளை ஆற்றி, உலகையே அதிரவைத்த போராட்டங்களை முன்னெடுத்து, ஈழத் தமிழினம் புரிந்த வியத்தகு சாதனைகளின் சரித்திரக் குறியீட்டு நாள் இன்று.**

**அத்தகைய தியாகங்கள், ஈகங்கள், அர்ப்பணிப்புகள், தற்கொடைகள், சாதனைகள், வியத்தகு வீர காவியங்களின் பின்னரும் தமிழரின் வாழ்வில் விடிவு கிட்டவில்லை என்பதுதான் நமது வேதனை கலந்த தலைவிதி.**

**முடிவில்லா ஒரு துன்பியல் நாடகமாக நமது இனத்தின் சோகக் கதை தொடர்கின்றது.**

**தமிழ்த் தேசத்தை அடக்கி ஆளும் சிங்களம், தன்னை ஒரு பௌத்த நாடு என்கின்றது. அன்பையும், அறத்தையும், ஞானத்தையும் போதித்த காருண்ய சீலர் புத்த பெருமானின் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்கின்றது அது. தர்மத்தின் தத்துவத்தில் தழைத்தோங்கிய பௌத்த சமூகத்தில் இன்று இனக்குரோதமும் மேலாதிக்கத் திமிரும், போர்வெறியும்தான் வெளிப்பட்டுநிற்கின்றன. இனசௌஜன்யத்தையே போதித்த புத்தரின் பெயரில் இன்று இனக்குரோதமே பீறிட்டுக் கொப்பளித்து வெளிப்பட்டு வருகின்றமை விநோதமானது; விபரீதமானது.**

**இந்த இனக்குரோத அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து, அதில் தம்மை ஆகுதியாகக் கரைத்துக் கொண்ட நமது மாவீரர்களின் வித்துடல்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால், அவர்கள் நிலை நிறுத்திப் போயிருக்கும் இனமான உணர்வும் அதைத் தேடிப் பற்றும் வெறியும் தமிழினத்திலிருந்து துடைத்தழிக்கப்பட்டு விடவில்லை. அவை இன்னும் தணியாத அக்னியாக - நீறு பூத்த நெருப்பாக - ஒவ்வொரு தமிழனின் மனதுக்குள்ளும் கனன்று கொண்டே இருக்கின்றன. அவை அடங்கி விடா என்பதை உருவெடுத்துக் காட்டும் குறியீட்டு நாளாக இன்றைய தினம் அமைகின்றது.**

**இந்தப் பூமிப்பந்தையே தமது பூகம்ப அதிர்வுகளால் புரட்டிப் போட்ட போராட்ட வரலாறுகளில் பிற எவற்றுக்கும் குறையாத வீரத்தையும் தீரத்தையும் காட்டிய விடுதலை வேள்வி ஒன்றை நடத்திய தமிழினம், இன்று அதில் தோற்றுப் போய் தலைகுனிந்து நிற்கையில், அந்தப் போராட்ட நாயகர்களை போற்றிப் பூஜிக்கும் இத்தினத்தைக் கடக்கின்றோம்.**

**இனி நாம் என்ன செய்வது? வீர மறவர்களைப் போற்றிப் பூஜித்து, மனதில் இருத்தி, உறுதி எடுப்பதோடு அடங்கி விடுவதா? யாது செய்வது?**

**இதற்கான வழியையும் கூட இன்று நாம் பூஜிக்கும் வீரமறவர்களை - சூரியப் புதல்வர்களை - வழிப்படுத்தி, நெறிப்படுத்திய, வல்லாளனே நமக்குக் காட்டிச் சென்றுள்ளான்.**

**ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்துக்குக் குறுக்கே பெரும் மலைபோல இந்தியப் படைகள் வந்தபோது தலைவர் பிரபாகரன் அதனைக் கோடி காட்டினார்.**

***"சிங்களப் பேரினவாதம் இந்த (இலங்கை - இந்திய) ஒப்பந்தத்தை விழுங்கி ஏப்பமிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை.***

***"எமது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும் வரை - இறுதிக் குறிக்கோளை நாம் அடையும் வரை - நாம் தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்போம்.***

***"எமது போராட்டத்தின் வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது குறிக்கோளை அடைவதற்கான போராட்டங்கள் மாறப்போவதில்லை. எமது குறிக்கோளை ஈடேற்றுவதற்கு எமது மக்களின் முழுமையான - ஒன்றிணைந்த - ஆதரவு எப்போதும் இருக்க வேண்டும்."***

**இது, இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதுமலைக் கூட்டத்தில் - தலைவர் பிரபாகரன் முத்தாய்ப்பாய் முடித்த உரையின் இறுதி வாசகங்களின் சாரம்.**

**இந்த வழிகாட்டலை இன்றைய உயரிய நாளில் எமது பிரதிக்ஞையாகக் கொண்டு, அதன் வழி ஐக்கியப்பட்டு செயலாற்றுவதே மாவீரர்களின் ஒப்புயர்வற்ற ஈகத்துக்கு நாம் செய்யக்கூடிய ஒரே கைம்மாறாக இருக்க முடியும்.**

# ஆயுதப் போராட்டத் தலைமைகளில் சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்டவராகப் பிரபாகரன் மட்டுமே இருந்தார்







பிரபாகரன் அவர்களை ஓர் ஆயுதப் போராட்டத் தலைவராகவே வெளியுலகம் அறிந்து வைத்திருக்கிறது. அவரைப்பற்றி அறியப்படாத பல பக்கங்கள் உள்ளன. அதில் சுற்றுச்சூழல் குறித்த அவரது அக்கறையும் ஒன்று. உலகசூழல்தினத்துக்காகத் தங்கள் மாணவர் தினத்தையே மாற்றி அமைத்தவர் அவர். நான் அறிந்தஆயுதப் போராட்டத் தலைமைகளில்சுற்றுச்சூழல்மீது இப்படி அக்கறை கொண்ட ஒரு தலைவராகப்பிரபாகரன்மட்டுமே இருந்தார் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமைசிறுப்பிட்டியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியபோது –

விடுதலைப்புலிகள் ஜூன் 5 ஆம் திகதி தங்களது மாணவர் அமைப்பின் ஊடாக மாணவர் தினத்தைக் கொண்டாடி வந்தார்கள். ஜூன் 5 ஆம் திகதி பொன்.சிவகுமாரனின் நினைவு தினம். இதனாலேயே, ஜூன் 5 ஆம் திகதியை மாணவர்தினமாகத்தெரிவு செய்து மிக விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

ஐக்கியநாடுகள் சபையால் ஜூன் 5 ஆம் திகதி உலக சூழல் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு தடவை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் தமிழீழ பொருண்மியமேம்பாட்டுக்கழகம் உலக சூழல் தினத்தைக் கொண்டாடியது. பேச்சாளராக நானும் போயிருந்தேன். அரங்கில்கலந்து கொண்டவர்களின்எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. மேடையில் இருந்த பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பிரதிநிதிகளிடம் இது தொடர்பாக நான் குறைப்பட்டுக் கொண்டபோது, அந்நிகழ்ச்சி நடைபெற்ற அதே நேரம் மாணவர் தினமும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருப்பதால் இந்நிகழ்ச்சியைச்சரியாகஒழுங்கு பண்ண முடியாமல் போனதாகத் தெரிவித்தனர். இதன் பின்னர் நான் பேசும்போது, பகிரங்கமாகவே மாணவர் தினத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் சூழல் தினத்துக்கும்கொடுக்கவேண்டும் என்று பேசினேன்.

அப்போதெல்லாம் மக்களின் கருத்தறிவதற்காகச் சந்திக்குச் சந்தி அபிப்பிராயப் பெட்டிகள் இருக்கும். அன்றிரவே தலைவர் பிரபாகரன்அவர்களுக்குச்சுற்றுச் சூழல் தினத்தின் முக்கியத்துவம் குறித்துக் கடிதம் ஒன்றை எழுதி அபிப்பிராயப்பெட்டியில்சேர்ப்பித்தேன். அக்காலப் பகுதியில் கிட்டு பப்பாசி மிகவும் பிரபலமாக இருந்தது. அது குறித்தும் கடிதத்தில் எழுதியிருந்தேன். கிட்டு அவர்கள் வெளிநாட்டில் இருந்து விதைகளை எடுத்து வந்தமைக்காக அவர் பெயரைப் பப்பாசிக்குச் சூட்டுவது தவறு என்றும், அவ்வாறு சூட்டுவது அந்தப் பப்பாசி ரகத்தைக் கண்டுபிடித்தவரின் அறிவுச்சொத்துரிமையைத்திருடுவது போலாகும்என்றும்குறிப்பிட்டிருந்தேன். எனது கடிதத்துக்குப் பதிற் கடிதம் எதுவும் அவரிடம் இருந்து வரவில்லை.

கடிதம் வரவில்லையே தவிர, செயலால் பதில் சொல்லியிருந்தார். அடுத்த சில தினங்களில் அவர்களது பண்ணைகளில் மாட்டப்பட்டிருந்த கிட்டு பப்பாசிப் பெயர்ப் பலகைகள் அகற்றப்பட்டன. அடுத்த வருடத்திலிருந்து அவர்களது மாணவர் தினம் ஜூன் 5 ஆம் திகதியில் இருந்து ஜூன் 6 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. கடைசிவரை ஜூன் 6 திகதியே மாணவர்தினத்தைக்கொண்டாடி வந்தார்கள். ஆயுதப் போராட்டத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் வேறுஎந்தத்தலைவரும்இவரைப் போல நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். அதனால்தான் இவர் தேசியத்தலைவராக இன்றும் எம் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். – என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவீரர்களின்பெற்றோர்கள், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தார்கள்.



## இந்தியாவிலும் சிறப்பாக இடம்பெற்றது பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம்!





கொழும்பு, நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியாவிலும் இடம்பெற் றுள்ளன.


இந்த நிலையில், நாம் தமிழர் கட்சியினரால் ஈரோட்டில் வீதியோரம் வசிக்கும் ஆதரவற்றோருக்கு போர்வைகளும், ரொட்டியும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் சார்பாக பட்டுக்கோட்டை நகராட்சி பள்ளி நூலகத்திற்கு நூல்கள் வழங்கப்பட்டமையுடன், பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்புக்களும் வழங்கப்பட்டன.

பெண்களுக்கெதிரான
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்களுக்கு அங்கீகாரத்தினை கொடுப்பதனூடாக பெண்களுக்கெதிரான வன்முறையினை ஒழிப்போம்.
JSAC
16
2017
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

**நாளை**
**28.11.2017**
**செவ்வாய்க்கிழமை**
நட்சத்திரம் : பூரட்டாதி பி.ப. 01.25 வரை
திதி : நவமி கா. 06.37 வரை
சுபநேரம் : 10.43 – 12.13 வரை
இராகுகாலம்: 03.13 – 04.43 வரை

# மீளுயிர் பெற்ற துயிலுமில்லங்கள்!



யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைக்காக உயிர் கொடுத்த மாவீரர்களை நினைவு கூரும், மாவீரர் நாளுக்காகத் தாயகத் தில் உள்ள மாவீரர் துயிலுமில்லங் கள் தயாராகியுள்ளன. மாவீரர் நாள் இன்று உலகெங்கும் ஈழத் தமிழர்கள் வாழும் நாடுகளில் நினைவுகூரப்பட உள்ளது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர், இம்முறை தாயகத்தில் உள்ள பெரும் பாலான துயிலுமில்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தும் சூழல் அமைந்துள்ளது.

போருக்குப் பின்னர், இலங்கைப் படைகளால் அழிக்கப்பட்ட துயிலு மில்லங்கள், நினைவிடங்கள், துப் பரவுசெய்யப்பட்டு, மாவீரர்நாள்நினைவு கூரலுக்காகத் தயாராகி வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில், தீவ கம், சாட்டி மற்றும் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர்துயிலுமில்லங்கள் மாத்திரம், இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுபட்டுள்ளன.

இந்தத் துயிலுமில்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு, எஞ்சியிருக்கும் நடு கற்களைக் கொண்டு நினைவுச்சின் னங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தத் துயிலுமில்லங்களில் இன்று மாலை மாவீரர்களுக்குச் சுடரேற்றி அஞ் சலி செலுத்த விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே வேளை, கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம் துயிலுமில்லங்கள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கின்றமையால், அவற்றுக்கு அருகில் மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தி ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர, பன்னிரு வேங்கைகள் மற்றும் கேணல் கிட்டு ஆகியோரின் நினைவுச்சின்னங்கள் அமைந்திருந்த வல்வெட்டித்துறை தீருவில் திடலி லும் மாவீரர்களை நினைவுகூரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனக புரம், முழங்காவில் மாவீரர் துயிலுமில் லங்கள் துப்புரவு செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இங்கு எஞ்சியிருந்த நடுகற்களைக் கொண்டு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவ மடு- தேராவில் துயிலுமில்லம், இரா ணுவ ஆக்கிரமிப்பில் உள்ள நிலை யில், அதனருகில் உள்ள ஒரு பகுதி யில் மாவீரர்களை நினைவுகூர ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முள்ளியவளை, துயிலுமில்லத்தி லும், அவ்வாறே ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. வன்னி விளாங்குளம் துயிலுமில்லத்தில், துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு, நினைவேந்தலுக்கான ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரணைப்பாலை துயிலுமில்லத் திலும், நினைவுகூரல் ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

மன்னார் மாவட்டத்தில், பெரிய பண்டிவிரிச்சான், ஆட்காட்டிவெளி துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில், ஈச்சங்குளம் துயிலு மில்லப் பகுதியிலும் நினைவுகூரல் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

திருகோணமலை மாவட்டத் தில் சம்பூர் - ஆலங்குளம் துயிலுமில்லம் துப்புரவு செய்யப்பட்டு நினைவு கூரலுக்கான ஏற்பாடுகள் மேற்கொ ள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் தரவை, மாவடி முன்மாரி துயிலுமில்லங்களிலும், அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிக் குடிச்சாறு துயிலுமில்லத்திலும் மாவீரர்களை இன்று நினைவுகூரு வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

இன்று மாலை 6.05 மணியளவில், மணிஒலி எழுப்பலுடன் ஆரம்பமாகி, ஒரு நிமிட மௌனவணக்கத்தை அடுத்து, 6.07 மணியளவில் பொதுச் சுடர் ஏற்றப்படும் என்பது குறிப்பிடத் தக்கது.

## புதுடில்லி பேச்சுக்கள் வெற்றி!

கொழும்பு, நவ. 27

கடந்தவாரம் புதுடில்லிக்கு மேற்கொண்டிருந்தபயணத்தின் போது, இந்தியத் தலைவர்களு டன் தாம் நடத்திய பேச்சுக்கள் வெற்றிகரமானவையாக அமைந் தன என்று பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள அபிவி ருத்தித் திட்டங்கள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றி கரமாக அமைந்துள்ளன.

எட்கா உடன்பாடு தொடர்பாக இந்தியப் பிரதமருடன் கலந்து ரையாடப்பட்டது. எமது பேச் சுக்கள் சாதகமாக முடிந்துள்ளன.

இலங்கையில் பல்வேறு அபி விருத்தித் திட்டங்களை மேற் கொள்வது தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் கையெழுத்திட்ட உடன்பாடு குறித்தும் இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போது பேசப்பட்டது.

இந்தத் திட்டங்களில் சில தாமதமாகின்றமை குறித்தும் கலந்துரையாடினோம்.

இந்தியாவுடன் இணைந்து மேற்கொள்ளும் இரண்டு திட் டங்களில்ஜப்பானும்இணைந்து கொள்ளவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## கையடக்கத் தொலைபேசி, இணையத்தள பாவனை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 27

நாட்டில் இந்த வருடத்தின் முதல் எட்டு மாத காலப்பகு தியில் 2 கோடியே 80 லட்சம் கையடக்கத் தொலைபேசி கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது 13.8 சதவீத அதிகரிப்பாகும்.

இதேபோன்று இணையத் தளத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் 55 லட்சமாக அதிகரித்துள்ளது. இது 26.5 சதவீத அதிகரிப்பாகும் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## வவுனியா செயலகத்தில் இன்று தொகுதி நிர்ணயம் குறித்த கூட்டம்!

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான தேர் தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான கூட்ட மொன்று இன்று பிற்பகல் 2.30 மணி முதல் மாலை ஆறு மணி வரையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கென தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்காக நியமிக் கப்பட்ட குழு தேர்தல் தொகுதி நிர்ணயம் குறித்து அரசியல் கட்சிகள், பொதுமக்கள் அமைப்புகள் மற்றும் பொது மக்களின் கருத்துக்கள், ஆலோச னைகளைக் கோரியுள்ளது.

இதற்கமைவாக இந்தக் கூட்டத்தை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்காக தேர்தல் தொகுதி களை நிர்ணயிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திலும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற் காக நாளை காலை அது தொடர்பான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செய லகத்திலும் பிற்பகல் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங் களில் உள்ள பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை நாளை மறு தினம் இடம்பெறவுள்ளது.

மாகாண சபை தொகுதி நிர்ணயம் குறித்து ஆர்வம் கொண்டுள்ள பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் இந்தக் கூட்டத்தில் தமது ஆலோசனை மற்றும் கருத் துக்களைச் சமர்ப்பிக்கமுடியும்.

மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொண்டு நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் இன விகிதாசாரம் மற்றும் தொகுதி முறையில் தேர்தலை நடத்த அரசு தீர்மானித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## நெஞ்சம் நெக்குருகுகின்றோம்



எமது தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர்
**லயன் செ.மகாதேவா J.P.**
அவர்களின் மறைவால் துயருறுகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திக்கின்றோம்.

துர்க்காபுரம், தெல்லிப்பழை.
தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கம்.

## ஆழ்ந்த துயருறுகின்றோம்



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் ஆளுநர் சபையின் பிரதம இணைப் பாளரும் சிறந்த சமூக சேவையாளருமான
**லயன் செ.மகாதேவா M.J.F, J.P**
அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தமையிட்டு ஆழ்ந்த துயருறு கின்றோம். அவரது பிரிவு எமது கழகத்திற்கு மட்டுமல்ல, வட பகுதி தமிழ் கூறும் நல்லுலகிற்கே பேரிழப்பாகும்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

சுன்னாகம் லயன்ஸ் கழகம்.

# மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு எவருக்கும் அஞ்சத் தேவையில்லை

## த.தே.ம.முன்னணியின் மட்டு அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ்





மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பில் இராணுவப் புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸாருக்கு மக்கள் பயப்படத் தேவையில்லை என த.தே.ம. முன்னணி யின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ளத.தே.ம.முன்னணியின் மாவட்ட காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு –

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை, தரவை, தாண்டியடியில் துயிலுமில்லங்கள் இருக்கின்றன. தாண்டியடி துயிலுமில்லம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அங்கு சென்று மக்கள் அஞ்சலி செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

மாவீரர் துயிலுமில்லங்கள் அனைத்தும் பொது மக்கள் மற்றும் அமைப்புக்களினாலும் சுத்தம் செய்யப்பட்டு மாவீரர் நாள் நினைவுக்காகத் தயாராகியிருக் கின்றன. இன்று மாலை 6.05 மணிக்கு மக்கள் எந்த விதமான அச்சமும் இன்றி மாவீரர்களுக்கான அஞ்சலியைச் செலுத்த முடியும்.

துயிலுமில்லத்தின் சிரமதானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது, இராணுவப் புலனாய்வாளர்கள், பொலிஸார் சென்று மக்களைக் கேள்விகள் கேட்டு அச்சுறுத்தல்கள் விடுத்துள்ளனர் என அறிகிறோம். வாகரையைப் பொறுத்தவரை நாங்கள் சட்ட ரீதியான அனுமதி பெற்று, பொலிஸ் நிலையங்களில் அனுமதிகளைப் பெற்றே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

எனவே அஞ்சலி செலுத்துவதில் மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. மாவீரர் வார இறுதி நாளில் துயிலுமில்லங்களுக்குச் சென்று அஞ்சலி செலுத்த முடியும்.

மாவீரர் தினம் என்பது தமிழர்களின் இன விடுதலைக்காகத் தங்களை ஆகுதிகளாக்கிக் கொண்டவர்களை நினைவு கூரும் நாள் என்ற வகையில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் வருடா வருடம் நினைவு கூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்ற விசேட நாள் என்ற வகையில் அனைவரும் அஞ்சலி செலுத்துவோம் என்றும் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

(ப)

## மட்டக்களப்பில் தொடரும் கனமழை

மட்டக்களப்பில் கடந்த 24 மணித்தியாலமாகப் பெய்து வரும் தொடர் கன மழை காரணமாகப் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

குழப்பமான வானிலை தென்மேற்குக் கடல் பகுதியில் நிலவுவதால் தொடர்ந்தும் அதிக மழை பெய்யக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளது எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.கனமழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளதால், அன்றாட கூலித் தொழில் செய்பவர்கள் பாதிக்கப்படுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் மழையுடனான காலநிலை தொடரும் எனவும் மட்டக்களப்பு, திருகோணமலை, காங்கேசன்துறை, கொழும்பு ஊடாக காலி வரையான கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மீனவர்கள் அவதானமாக இருக்குமாறு மட்டக்களப்பு வானிலை மண்டல திணைக்களத்தின் சிரேஷ்ட வளிமண்டலவியல் அதிகாரி க.சூரியகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஏறாவூரில் தொழிலாளியின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தளவாய் கிராமத்தில் மேசன் தொழிலாளி ஒருவரின் சடலத்தை மீட்டுளோம்எனப்பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

சடலம் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளதுடன், ஏறாவூர் – புன்னைக்குடா வீதியைச் சேர்ந்த இஸ்மாயில் அஹமதுலெப்பை (வயது 67) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

மேசன் தொழிலாளியான இஸ்மாயில் அஹமதுலெப்பை தனது தொழில் நேரம் போக ஏனைய வேளைகளில்காணி பராமரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளார்.

புன்னைக்குடா வீதி, மஜீத் மாவத்தையில் அவருக்கு உரித்தான காணிக்கு அவர் வழமை போன்று பராமரிப்புக்காகச் சென்றுள்ளார்.

இந்த நிலையிலேயே அவர் அருகிலுள்ளதளவாய்கிராமக்காட்டுக்குள்இருந்து பொலிஸார் அவரது சடலத்தை மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக் காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

## வேலையற்ற பட்டதாரிகள் திருமலையில் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, நவ.27

திருகோணமலையில் வேலையற்ற பட்டதாரிகள் நேற்று முன்தினம் கோரிக்கையொன்றை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது மாவட்டத்தில் ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தும் சேவையில் உள்ளீர்ப்பு செய்யப்படாத அனைவருக்கும் நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கும் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம தலைமையில் நடந்து கொண்டிருந்த நிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தமக்கும் வேலை வாய்ப்புக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கலைந்து செல்லுமாறு கூறியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள்





திருகோணமலை, நவ.27

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 119 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வு திருகோணமலையில் நேற்று முன்னதினம் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிலையில்,ஆயிரத்து 441 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என கூறப்பட்டபோதும் ஆயிரத்து 119 பேருக்கு மாத்திரமே நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு வழங்க சீனா ஒப்புதல்!

மத்தள விமான நிலைய அபிவிருத்தி உள்ளிட்ட இந்தியாவுடன் இணைந்து இலங்கை மேற்கொள்ளும் கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு சீனா முழுமையான ஒப்புதலை வழங்கியுள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு அண்மையில் மேற்கொண்ட அதிகாரபூர்வ பயணம் தொடர்பாக கொழும்பு நாளிதழ் ஒன் றுக்கு விளக்கமளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த மத்தள விமான நிலைய அபிவிருத்தித் திட்டம், திருகோணமலை எண்ணெய் தாங்கி அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட




இந்தியாவுடனான கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு சீனா முழுமையான ஒப்புதலை வழங்கியுள்ளது.

சீனா, இந்தியாவுடன் இலங்கைக்கு சுமுகமான நட்புறவு உள்ள நிலையில், சில அரசியல் சக்திகள் தவறாக வழி நடத்த முயற்சிக்கின்றமை, வருத்தமாகவும், அநாகரிகமாகவும் உள்ளது.

தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தி, இலங்கை மற்றும் இரண்டு நட்பு நாடுகளுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கம்.

இரண்டு நாடுகளுடனும், இலங்கை சுமுகமான நெருங்கிய கலாசார, மத, வர்த்தக உறவுகளைக் கொண்டிருக்கிறது என்பதை சீனாவுக்கு நான் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன்.

பரஸ்பரம் அனைவருக்கும் நன்மையளிக்கும் வகையில், இந்த நட்புறவு முன்னேற்றப்பட வேண்டியது முக்கியமானது என்றும் சீனாவுக்கு எடுத்துக் கூறினேன். இந்த உணர்வுகளை சீனா முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறுவர் இல்லங்கள் தொடர்பில் பாதுகாப்பு அதிகாரசபை கவனம்!



கொழும்பு, நவ. 27

சிறுவர்களை சிறுவர் இல்லங்களில் தங்கவைக்காது பெற்றோரால் அர்ப்பணிப்புடன் பராமரிக்கும் முறை ஒன்றை அறிமுகம் செய்வதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது.

சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளைகளை குடும்பங்களுடன் இணைந்து வாழக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி மரினி டி லிவேரா-

சிறுவர் இல்லங்களில் தாய் மற்றும் தந்தையை இழந்த சிறுவர்கள் மாத்திரம் அன்றி ஏனைய சிறுவர்களும் தங்கவைக்கப்படுகின்றனர்.

பொருளாதார சிரமங்களினாலும் சிறுவர்கள் இவ்வாறு சிறுவர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இருந்த போதிலும் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியுடன் வாழக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்த புதிய நடைமுறை தொடர்பில் கவனம் செலுத்தியுள்யோம். இதனூடாக சிறுவர்களுக்கு நெருக்கமான உறவினர் அல்லது அவர்க ளுக்கு நன்கு அறிந்த ஒருவருடன் பொது வாழ்க்கையை பழகிக் கொள்வதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசேட சர்வதேச மாநாடு ஒன்று மோல்ட்டா அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் புதிய நடைமுறையில் இலங்கையிலும் மாதிரித் திட்டமொன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு மற்றும் அதிகார சபையும் கூட்டாக முன்னெடுப்பதாக இந்த மாநாட்டில் கலந்துகொண்ட சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கான ஆலோசனைகளை ஆசிய மாற்று சிறுவர் பாதுகாப்பு விசேட ஆய்வாளரான இயன் போபர் வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் வாகன நெரிசல்களுக்குக் காரணமாகும் வீடமைப்புத் திட்ட நிர்மாணங்களுக்கு அனுமதி மறுப்பு!

கொழும்பு, நவ. 27

தெஹிவளை, கல்கிஸ்ஸைஉட்படகொழும்பு நகரங்களில் வாகன நெரிசல் ஏற்படுவதற்கு காரணமாகும் வகையிலான எந்தவொரு வீடமைப்பு திட்டங்களுக்கும் கட்டட நிர்மாணத்திற்கும் இனிமேல் அனுமதி வழங்கப்போவதில்லை என மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் வெளிவிவகார, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை, அபிவிருத்திபணிப்பொறுப்பு அமைச்சுகளுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பு கோட்டையில் இருந்து பயணிக்கும் வகையிலான இலகு ரயில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அடுத்த வருடம் ஆரம்பிக்கதிட்டமிட்டுள்ளோம். மேலும் கோட்டையில் இருந்து பொரளை வரையான அதிவேகபஸ்சேவையையும் விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம்.

நாட்டில் 60 லட்சம் வாகனங் கள் உள்ளன. இவற்றில் 40 லட்சம் வாகனங்கள் செயற்பாட்டில் உள்ளன. இதில் 70 வீதமானவை முச்சக்கர வண்டியும் துவிச்சக்கர வண்டியுமாகும். 10 லட்சத்துக்கும் குறைவாகவே ஏனைய வாகன வகைகள் உள்ளன.

இதன்படி போக்குவரத்து துறைக்கே அரசின் மூலதன செலவில் பெருந்தொகையானவற்றை செலவிடுகின்றோம். இதன்படி 30 ஆயிரம் கோடி ரூபா பெற்றோல் இறக்குமதிக்கு செல விடப்படுகின்றது.

மேலும் வாகனங்கள் மற்றும்வாகன இயந்திரங்களுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாசெலவிடப்படுகின்றன. எனவே, வாகனங்கள் தொடர்ந்து அதிகரித்தால் வாகன நெரிசலுக்கு வழிவகுப்பதுடன் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும்.

இதன்படி பொது போக்குவரத்தை பலப்படுத்த வேண்டும். நாட்டில் 50 சதவீதமானவர்கள் பொது போக்குவரத்தில் பயணிக்கின்றனர். எனினும் தற்போதைக்கு 25 ஆயிரம் பஸ் வண்டிகளே களத்தில் உள்ளன.

ஆனால் ஏனைய 50 வீதத்தினர் வேறு வாகனங்களில் பயணிக்கின்றனர். இதன்படி கணக்கிட்டுப் பார்க்கும் போது ஒரு பஸ் வண்டி சேவையில் இருந்து விலகினால் பயணிகள்பயணிப்பதற்கு 140 வாகனங்கள் தேவையாக உள்ளன.


மேலும், டாடா பஸ்கள் எமக்கு இனிமேல் பிரயோசனம் தர முடியாது. ஆகையால் சொகுசு பஸ் வண்டிகளை களத்திற்குஇறக்கவேண்டும்.

அத்துடன், ஆங்கிலேயர் காலத்தின் பின்னர் ரயில் பாதை கட்டமைப்பில் எந்த வொரு மாற்றமும் வரவில்லை. இந்நிலையில் எமது அரசால் கொழும்பு கோட்டையில் இருந்து பயணிக்கும் வகையிலான இலகு ரயில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அடுத்த வருடம் ஆரம்பிக்கதிட்டமிட்டுள்ளோம்.

மேலும் கோட்டையில் இருந்து பொரளை வரையான அதிவேக பஸ்சேவையையும் விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். மேலும் மின்சார ரயில் சேவையையும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

இதேவேளை, தெஹிவளை, கல்கிஸ்ஸை உட்பட கொழும்பு நகரங்களில் வாகன நெரிசல் ஏற்படுவதற்கு காரணமாகும் வகையிலான எந்தவொரு வீடமைப்பு திட்டங்களுக்கும் கட்டட நிர்மாணத்திற்கும் இனிமேல் அனுமதி வழங்கப்போவதில்லை. மேலும் நாடளாவிய ரீதியில் அரச காணிகளில் 10 வீதம் நெடுஞ்சாலை அபிவிருத்திக்கு பிரயோகம் செய்யப்படுகின்றது. இது பாதிப்பான செயற்பாடாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வங்காள விரிகுடாவில் புயல்; இலங்கை, தமிழகம் பாதிப்புறும்



தென்மேற்கு வங்காள விரிகுடாவில்உருவாகிவரும் புயலால் இலங்கையும், தமிழ் நாட்டின் தெற்கு கரையோரப் பகுதிகளும் அடுத்த வாரம் கடுமையானபாதிப்புக்களைச் சந்திக்கக் கூடும் என்று அமெரிக்காலநிலைமுன்னறிவிப்பு மையம் தெரிவித்துள்ளது.

வார இறுதியில் இருந்து இந்தப் புயலின் தாக்கத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 28 ஆம் திகதி வரை கடுமையான மழை தொடக்கம் மிகக் கடுமையான மழை வரை, இலங்கையிலும், தென்னிந்தியாவின் கரையோரப் பகுதிகளிலும் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் தெரிவித்துள்ளது.

# தேர்தலை நடத்த வலியுறுத்தி 30 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, நவ. 27

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும்படி அரசை வலியுறுத்தி ஜே.வி.பி. நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது என அதன் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

முதலாவது ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியில் அங்கம்வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணையும் வரை உள்ளூராட்சித் தேர்தல்களை பிற்போடுவதற்கு மைத்திரி தரப்பு ஸ்ரீ.சு.கட்சி சூழ்ச்சி செய்வதாகவும் டில்வின் சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார். (க)

## தினசரி ராசி பலன் 27.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 5 ஆம் நாள் திங்கட்கிழமை அஷ்டமித் திதி பகலட 11.03 மணிவரை. பின்னர் நவமி. நட்சத்திரம் சதயம் மாலை 4.37 மணிவரை. பின்னர் பூரட்டாதி. சித்தயோகம் மாலை 4.37 மணி வரை. பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 7.37 மணிமுதல் 9.04 மணிவரை.*

**சுபநேரம்** - *காலை 12.18 மணிமுதல் 1.48 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *கார்த்திகை மாத வளர்பிறை நவமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சதயம்.*

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** நன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். செய்யும் தொழில் விருத்தியடையும். உத்தியோகத்தில் சோதனைகளைக் கடந்து மேன்மை அடைவார்கள்.

**ரிஷபம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. புதிய முயற்சிகளில் ஆர்வம் குறையும். குறைந்த வருமானம் இருந்தாலும் செலவுகள் அதிகரிப்பால் மனச் சங்கடம் உண்டாகும்.

**மிதுனம்:** யோகமான நாள். பணவரவு தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். திட்டங்கள் அனைத்தும் திறமையுடன் செயலாக்கம் பெற்றுக் கொள்ளும்.

**கடகம்:** கவலையான நாள். வருமானம் குறைவடையும். தேக நலத்தில் அக்கறை கொள்ள வேண்டும். உறவினர்களுடன் வீண் பகைமை உண்டாகும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன்பட நேரும்.

**சிம்மம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். மருத்துவச் செலவுகள் உண்டாகும். மாணவர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டால் முன்னேற்றம் உண்டு.

**கன்னி :** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். இவர்களின் திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு கேட்ட இடத்தில் மாறுதல், அதிகாரிகளின் நேசக் கரம் கிடைத்து மகிழ்வார்கள்.

**துலாம் :** அனுகூலமான நாள். எதிர்பார்த்தபடி பதவிகளும், பட்டங்களும், பொருளாதார ஏற்றமும் கிடைக்கும். தனியார் துறையினர் போட்ட திட்டங்கள் அனுகூலமாகும்.

**விருச்சிகம் :** சலனம் மிகுந்த நாள். செய்யும் தொழிலில் கவனம் தேவை. விவசாயிகளுக்கு செலவுகள் அதிகரிப்பால் கடன்படும் நிலை உண்டாகும். வியாபாரிகள் சோம்பேறித் தனமாக இருப்பார்கள்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தொழிலதிபர்களுக்கு பல வழிகளிலும் வாய்ப்பு கிடைப்பதால் ஏமாற்றப்பட நேரும். கொடுக்கல் வாங்கலில் அவதானம் தேவை.

**மகரம்:** மேன்மையான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் அன்பு நிறைந்து காணப்படும். தூரத்தி வந்த நீண்ட காலத் தொல்லைகள் அகலும். சகோதர உறவு பலப்படும்.

**கும்பம்:** அதிர்ஷ்டமான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்ப உறவு மேம்படும். கிடைக்க வேண்டிய கடன் வந்து சேரும். வெளிநாட்டு உறவினரிடமிருந்து பொருள்கள் வந்து சேரும்.

**மீனம் :** சஞ்சலமான நாள். பொருளாதாரம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் கருத்துவேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: புனர் பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் தோன்றியோர் இன்று சுபகருமங்கள் ஆரம்பிக்கின்றமையைத் தவிர்க்கவும்.**

# இலங்கை குடும்பத்துக்காக நியூஸிலாந்தில் பேரணி!




நாடுகடத்தப்படவிருக்கும் இலங்கை குடும்பத்துக்கு ஆதரவாக நியூஸிலாந்தின் குவீன்ஸ்டவுன்வாசிகள் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

தினேஷா அமரசிங்க, அவரது கணவர் சேம் விஜேரத்ன மற்றும் அவர்களது மூன்று பிள்ளைகள் ஆகியோர் கடந்த எட்டு வருடங்களாக நியூஸிலாந்தின் குவின்ஸ்டவுன் நகரில் வாழ்ந்து வருகின்றனர்.

மூன்று வருடங்களுக்குமுன்னர் தினேஷா 'மல்ட்டிபிள் ஸ்லெரோசிஸ்' என்ற நோயினால் பாதிக்கப்பட்டார். இதையடுத்து, தினேஷாவையும் அவரது குடும்பத்தினரையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு நியூஸிலாந்து அரசு உத்தரவிட்டது.

மனிதாபிமான அடிப்படையில்முறையீடுசெய்தபோதும் அதை அரசு நிராகரித்தது. இந்த நிலையில், தினேஷா மற்றும் அவரது குடும்பத்தினர் எப்போது வேண்டுமானாலும்நாட்டைவிட்டுவெளியேற்றப்படலாம் என்ற நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில், நேற்று தினேஷாவின் 42 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, அந்தப் பகுதி வாசிகள் பலர் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகவும் தினேஷாவுக்கு சார்பாகவும் பேரணி ஒன்றை நடத்தினர். இந்தப் பேரணியை க்ளூதா சௌத்லேண்ட் நாடாளுமன்ற உறுப்பினர் ஹமிஷ் வோக்கர் ஏற்பாடு செய்திருந்தார்.

எமக்கு நேர்ந்த அநீதியை யாரும் தட்டிக்கேட்கவில்லை என்றும் எமக்குச் சார்பாகப் பேசவும் ஆளில்லை என்றும் எண்ணியிருந்தேன். ஆனால், இந்தத் திடீர் பேரணியால், என் மீது அன்பு வைத்திருப்பவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிந்திருக்கிறது என்று தினேஷா கூறியுள்ளார்.

பேரணிக்கு முன், தினேஷாவின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் ஒன்றையும் பேரணியில் கலந்துகொண்டவர்கள் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு; அரசியல் பிரமுகர்களுக்கு முக்கியத்துவமில்லை

கொழும்பு, நவ. 27

அரசியல் பிரமுகர்கள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். ஆனால், அவர்களுக்குமுக்கியத்துவம் வழங்கப்பட மாட்டாது என மன்னார் மாவட்ட மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் வி.எஸ். சிவகரன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

மன்னார் மாவட்டத்தின் பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் ஆட்காட்டிவெளி ஆகிய இரண்டு மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவெழுச்சி நிகழ்வுகளுக்கு உரிய ஏற்பாடுகள் யாவும் நிறைவடைந்துள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளலாம். இருப்பினும் முக்கியத்துவம் வழங்கப்படமாட்டாது.

பிரதான பொதுச்சுடர் இரண்டு துயிலுமில்லங்களிலும் மாவீரர்களின் பெற்றோர்களே ஏற்றுவார்கள். ஏனையவர்களுக்கும் தீபம் ஏற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆண்கள், பெண்கள் தமிழ் கலாசார உடை அணிந்து வருவது ஏற்புடையதாகும். இதன்போது 'செல்பி' எடுப்பதை தவிர்த்துக் கொள்ளவும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும்.

தமிழீழ விடுதலைக்காக எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி தன்னுயிரை தியாகம் செய்த வீர மறவர்களின் தியாக இருப்பிடமே துயிலும் இல்லங்கள் என்பதை மனதில் நிலை நிறுத்தவும்.

அத்துடன், மாவீரர்களின் பெற்றோர்களை, உறவினர்களை, மன ரீதியாக சங்கடப்படுத்துகின்ற செயற்பாட்டில் எவரும் ஈடுபட வேண்டாம் என்பதனை தயவுடன் வேண்டுகின்றோம்.

மேலும், வருகையாளர்கள் அனைவரும் ஏற்பாட்டாளர்களின் ஒழுங்கை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம். போக்குவரத்திற்குரிய பேருந்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, அனைவரையும் குறித்த நேரத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை –

**யாழ். பிரதேசத்தில்**- மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கோவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில்**- பம்பைமடு கிராமம், கற்பகபுரம் கிராமம், நெளுக்குளத்திலிருந்து பம்பைமடுவரை, நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம். துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 18**

## காரைக்குடி கம்பன் விழாவில் முதன்முதலாக... 18.03.1981

### நாட்டரசன் கோட்டை பயணம்

காரைக்குடியில் முதல் மூன்று நாள்கள் விழா முடிந்த பின் நிறைவு நாள் விழாவை நாட்டரசன் கோட்டை கம்பன் சமாதியில் கம்பன் அடிப்பொடி நடத்துவார் எனச் சொல்லியிருந்தேன் அல்லவா? அதனைக் கம்பன் அடிப்பொடி நடத்தும் பாங்கு அலாதியானது. மூன்று நாள் விழாவில் கலந்துகொண்ட பேரறிஞர்கள் எல்லோரும் அந்நிகழ்விலும் கலந்துகொள்வார்கள். இப்போதெல்லாம் பட்டி மண்டபங்களில் பேச வருகிறவர்கள் கூடத் தங்கள் வாதத்தை முடித்துக்கொண்டு தீர்ப்பு பற்றிக்கூடக் கவலைப்படாமல் நடுவரை ‘அம்போ’ என விட்டுவிட்டுப் போய்விடுகின்றனர். அக்காலத்தில் யாரும் அப்படி செய்வதில்லை. கண்ணியம் காத்த காலமது. மூன்று அல்லது நான்கு பஸ்களில் அனைவரையும் நாட்டரசன் கோட்டைக்குக் கம்பன் அடிப்பொடி ஏற்றிச் செல்வார். அதிகாலையிலேயே இங்கிருந்து செல்லும் அனைவருக்குமான உணவுகள் காரைக்குடியிலேயே தயாரிக்கப்பட்டுவிடும். விதம்விதமான ‘சித்திரான்னங்கள்’ செய்யப்பட்டு பெரிய அண்டாக்களில் அவை பஸ்ஸில் ஏற்றப்படும். அனைவருமாக பஸ்ஸில் புறப்பட்டுச் செல்லும்போது இடையிடையே கம்பன் அடிப்பொடி ‘கம்பன் வாழ்க’ எனக் கோஷம் எழுப்புவார். ‘வாழ்க! வாழ்க!’ என உரைத்து அக்கோஷத்தில் அனைவரும் அவருடன் ஒன்றிணைவார்கள். நாட்டரசன் கோட்டைக்குப் போகும் வழியின் இடைநடுவில் கம்பன் அடிப்பொடி அவர்களின் ஓர் அன்பர் கம்பன் அன்பர்களுக்காக மலைபோல இளநீர்களைக் குவித்து வைத்திருப்பார். அங்கு இளைப்பாறி, இளநீர் குடித்தபின்பு பயணம் தொடரும். பின் மதியம் போல் நாட்டரசன் கோட்டை சென்று சேர்வோம்.

### நாட்டரசன் கோட்டை விழா

அது வளர்ச்சி பெறாத ஒரு குக்கிராமம். பற்றைகளின் நடுவிலே தான் கம்ப சமாதி இருந்தது. அருகில் ஒரு சிறு மடம். குடிப்பதற்குக்கூட அங்கு ஊருணி நீர் தான் கிடைக்கும். மண்ணிறத்தில் இருக்கும் அந்நீரைப் பார்க்கவே ஏதோ செய்யும். பேராசிரியர் எஸ். இராமகிருஸ்ணன் தமிழ்க்கடல் ராமராசன், கோதண்ட ராம கவுண்டர், புலவர் அருணகிரி, நீதியரசர் இஸ்மாயில், என் குருநாதர் போன்ற பெரியவர்கள் எல்லாம் எந்தக் கௌரவமும் பார்க்காமல் ஓலைக்கீற்று பந்தலின் கீழ் துண்டை விரித்துப் படுத்துக் கிடப்பார்கள். மதிய உணவின் பின் இடுப்பில் துண்டு கட்டி, அங்குள்ள ஆழக் கிணற்றில் கப்பியில் தண்ணீர் அள்ளிக் குளிப்பார்கள். பின், கம்பன் சமாதியில் பூசை நடைபெறும். ‘மார்க்சிச’ வாதியான பேராசிரியர் எஸ்.இராமகிருஸ்ணனும் அந்த பூஜையில் கலந்து கொள்வார். அந்த பூஜைக்கு ரோஜா மலர் கொண்டு வருவது அவரது வழக்கமாய் இருந்தது.

காரைக்குடி விருந்துக்கு இராமேஸ்வரத்திலிருந்து கோடூர் இராஜகோபால் சாஸ்திரிகள் முருங்கைக்காய் கொண்டு வருவார். பெரியவர்கள் ஒவ்வொருவரும் இங்ஙனமாய்த் தங்களைக் கம்பன் பணியில் இணைத்துக்கொண்டிருந்தனர். பூஜை முடிந்த பிறகு மாலை ஆறு மணியளவில் கம்பன் சமாதியிலேயே கூட்டம் ஆரம்பமாகும். பேரறிஞர் மட்டும் தான் அந்த கூட்டத்தில் பேச அனுமதிக்கப்படுவார்கள். என் குருநாதரின் பேச்சுதான் கடைசிப் பேச்சாக இருக்கும். மறக்கமுடியாத சம்பவங்கள் பலவற்றை அந்த கூட்டத்தில் பார்த்திருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

### ‘பாவிகள் நரகத்திற்கு போவார்கள்’

ஒருமுறை நாட்டரசன் கோட்டையில் நடந்த விழாவில் பேராசிரியர் எஸ்.இராமகிருஷ்ணன் தலைமையில் பேச்சாளர் சிலர் பேசினர். சிறு மேசையிட்டு பேச்சாளர்கள் பேச, பேரறிஞர்கள் எல்லாம் நிலத்தில் உட்கார்ந்திருந்து கேட்பார்கள். அன்று எல்லாப் பேச்சுக்களும் மிக அற்புதமாய் அமைந்தன. நிறைவாக என் குரு நாதர் பேச எழுந்தார். இராமனைத் திருமாலாக விவரிக்கும் கம்பனின் ஒரு பாடலை எடுத்துக் கொண்டு, ஒவ்வோர் அடியாக நயங்கள் உரைத்து, விளக்கம் செய்யத் தொடங்கினார். நான் முன்னரே சொன்ன தமிழ்க் கடல் இராமராசன் கீழே உட்கார்ந்திருந்தார். ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்த அவர், ஒரு வைஷ்ணவ பிராமணர். நெற்றியில் நாமம் வைத்திருப்பார். தமிழ் நூல்கள் முழுவதும் அவருக்குப் பாடமாய் இருந்தன. அதனாற்றான் அவரைத் ‘தமிழ்க் கடல்’ என்று அழைத்தனர். திருமால் பற்றி யார் எதைச் சொன்னாலும் உருகுவார். அன்று இராமனை திருமாலாய் உரைக்கும் கம்பன் பாடலை என் குருநாதர் விளக்கம் செய்யச் செய்ய தன்னை மறந்து அவர் உருகத் தொடங்கினார் ‘ஆஹா!’ ‘சபாஷ்!’ ‘அற்புதம்!’ ‘பிரமாதம்’ எனத் தன்னை மறந்து, வாய் விட்டு ஆர்ப்பரிக்கத் தொடங்கினார். அவர் ஆர்ப்பரிப்பில் மயங்கி, என் குருநாதரின் பேச்சும் உச்சநிலையைத் தொட்டது. குருநாதரின் பேச்சைக் கேட்கும் தமிழ்க் கடலின் ஆர்ப்பரிப்பைக் கேட்டும் சபை உறைந்து போய் இருந்த நிலையில், பாடலின் நிறை வடியை அற்புதமாய்ச் சொல்லிமுடித்தார் குருநாதர். ஆனந்தம் தாங்கமுடியாமல் தமிழ்க்கடல் ‘‘ஆஹா! ஆஹா!’’ என்று தலையில் கைவைத்து கும்பிட்டார். அக்காலகட்டத்தில் சென்னை கம்பன் கழகம் இராமாயண பதிப்பொன்றை வெளியிட்டிருந்தது. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், கம்பன் அடிப்பொடி, நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் போன்றோரே அந்நூற்பதிப்புக் குழுவில் அங்கம் வகித்தனர். அவர்கள் பதிப்பித்த நூலில் என் குருநாதர் அன்று பேசிய பாடல் பிற்சேர்கையில் சேர்க்கப்பட்டிருந்தது. பேச்சின் நிறைவில் சில நிமிடங்கள் மௌனித்த குருநாதர், தமிழ்க் கடலைப் பார்த்து ‘‘சார் இந்தப் பாடலைப் போய் பிற்சேர்க்கையில் போட்டுட்டாங்க சார்!’’ என்றார். அவ்வளவு தான். தமிழ்க் கடலுக்கு அதுகேட்டு ஆவேசம் வந்து விட்டது. உணர்ச்சிவயப்பட்ட அவர், தன் இரண்டு கரங்களையும் ஆகாயத்தை நோக்கி நீட்டி ‘‘பாவிகள் நரகத்துக்கு போவார்கள். பாவிகள் நரகத்துக்கு போவார்கள்’’ என ஒன்றுக்கு இரண்டு முறையாக பெரிய குரலெடுத்துச் சொன்னார். புத்தகப் பதிப்புக் குழுவினரில் சிலரும் சபையில் இருந்தார்கள். அவர்கள் யாரும் அவர் சாபத்தைத் தவறாய் எடுக்கவில்லையென்பது புன்னகை பூத்த அவர்கள் முகங்களில் தெரிந்தது. இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்.

### கற்றோர் சங்கமம்

இளைஞர்களான நாங்கள் நாடு கடந்து வந்ததை எல்லோரிடமும் சொல்லி சொல்லி கம்பன் அடிப்பொடி மகிழ்ந்தார். அப்போது தமிழக நிதி அமைச்சராய் இருந்த இரா.நெடுஞ்செழியன் அவர்கள் விழாவிற்கு வருகை தர, எம்மேல் கொண்ட அன்பின் மிகுதியால், அவரை நேரே நாங்கள் தங்கியிருந்த அறைக்கே அழைத்து வந்து, எமக்கு அறிமுகம் செய்து வைத்தார் கம்பன் அடிப்பொடி. அங்குள்ளவர்கள் பிரமித்துப் போனார்கள். கம்பன் அடிப்பொடி எம்மீது காட்டிய அளவற்ற ஈடுபாட்டால் நாம் விழாவிற்கு வந்த அறிஞர்கள் அனைவரினதும் செல்லக் குழந்தைகள் ஆனோம். கம்பன் அடிப்பொடி, என் குருநாதர் ஆகியோரின் மனங்களில் அவ்விழாவின்போது நாம் இடம்பிடித்தோம். வாரியார் சுவாமிகள், கி.வா.ஜகநாதன், குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ.விஸ்வநாதன், எஸ். இராமகிருஷ்ணன், தமிழ்க்கடல் இராமஇராசன், எம்.எம். இஸ்மாயில், திருக்குறள் முனுசாமி, கோதண்டராமக்கவுண்டர் புலவர், அருணகிரி போன்ற மிகவுயர்ந்த சான்றோர்களின் சங்கமம் அங்கு நிகழ்ந்தது. இங்குதான் நண்பர் வக்கீல் த.இராமலிங்கம், சுதா சேஷையன், அசோக்குமார், இன்று உயர் நீதிமன்ற நீதியரசராய் இருக்கும் இராம சுப்ரமணியன் ஆகியோரை இளைஞர்களாய்ச் சந்தித்தேன். கம்பன் அடிப்பொடியின் பேத்தி கண்ணகியைக் குழந்தையாய்ச் சந்தித்ததும் இங்குதான். இன்று தாயாய் அவள் எங்கள்மேல் செய்யும் அன்புக்கு ஓர் அளவில்லை.

### தற்செயலாய் கிடைத்த சந்தர்ப்பம்

அக்காலத்தில் காரைக்குடி விழாவில் பேசுவது என்பது பேச்சாளர்களுக்குக் கிடைக்கும் ‘ஒலிம்பிக்’ வாய்ப்பு. பெரிய பெரிய பேச்சாளர்கள் எல்லாம் அச்சந்தர்ப்பத்திற்காகக் காத்திருப்பார்கள். நிகழ்ச்சியில் பேசிப்போட்டு வராதவர்களுக்கு ஐந்தாண்டுத்தடை உத்தரவுச்சட்டம் கம்பன் அடிப்பொடியால் அப்போது அமுலாக்கப்பட்டிருந்தது. நாங்கள் சென்றபோது நிகழ்ச்சியில் பேசவிருந்த பேச்சாளர் ஒருவர் தன் மகன் விபத்துக்குள்ளானதால் தன்னை நிகழ்ச்சியிலிருந்து விடுவிக்கும்படி வந்து கெஞ்ச, கம்பன் அடிப்பொடி என்மீது கொண்ட அன்பால் ‘‘சரி, அதனை நீ பேசு’’ என எனக்கு வாய்ப்பு தந்தார். நான் ஆனந்தத்தால் ஆகாயத்தில் மிதந்தேன். பாத்திரங்கள் பேசுவதாய் அமைக்கப்பட்ட நிகழ்ச்சி அது. நான் சபரியாய் மாறி பேச வேண்டும். இராமாயணத்தில் அப்படி ஒரு பாத்திரம் இருக்கும் விடயமே அன்று தான் எனக்குத் தெரிய வந்தது. கம்பன் அடிப்பொடியிடம் புத்தகம் வாங்கிப்படித்து சபரிப்பாத்திரமாய் மாறி பேசி அனைவரிடமும் பாராட்டுப் பெற்றேன்.

(தொடரும்...)

# வெற்றிக்கு மேல் வெற்றிகள் பல கண்டு துயில் கொள்ளும் எங்கள் பிள்ளைகள்!




இன்று27 ஆம் திகதி மாவீரர் தினமாகும்!

சுமார் எட்டு வரு டங்களுக்கு முன்பு அதாவது வடக்கு-கிழக்குவிடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டில் அவர்களின் நிர்வாக கட்ட மைப்புக்குள் இருந்த வேளை, போர்க் களத்தில் படைகளுடன் சமராடி வீரச் சாவைத் தழுவிக்கொண்டவர் களை, அவர்களை விதைத்த துயிலு மில்லங்களில் நினைவு கூரும் உணர்வு மிக்க ஓர் எழுச்சி நாளே 'நவம்பர்-27' ஆகும்.

முன்பெல்லாம் மாவீரர் தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக வீதிகளின் இருமருங்கிலும் உள்ள புற்கள், பற்றைகள் மற்றும் குப்பைகள் அகற்றப் பட்டு சுத்திகரிக்கப்பட்டு வீதிகள் வெகுநேர்த்தியாகவும் அழகாகவும் காணப்படும்.

இதுதவிர, மாவீரர்களின் நினைவாக ஆலயங்கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள் மற்றும் சிறுவர் முன்பள் ளிகள் போன்றவற்றில் அந்தந்தப் பிரதேசப் பொறுப்பாளர்களின் மேற் பார்வையில் சிரமதானப் பணிகள் மக்களால் முன்னெடுக்கப்படுவதோடு, இரத்ததானநிகழ்வுகளும் இடம்பெறும்.

அத்தோடு, வீதிகளை மேவி உயர மான அலங்கார வளைவுகள், மாவீரர் களை தாங்கிய வண்ணம் காட்சிய ளிக்கும். மாவீரர் நாள் நெருங்க நெருங்க மக்கள் மனதில் ஓர் இனம் புரியாத சோக உணர்வையும் மீறி மகிழ்ச்சிப் பிரவாகம் கரைபுரள ஆரம்பிக்கும்.

காரணம்-

மாவீரர் நாள் என்பது எமது குடும் பத்தில் உள்ள ஒருவர் இறந்து, அவ ருக்கு வருடாந்தம் செய்யும் 'ஆண்



டுத்திவசம்' போன்றதல்ல இந்த நிகழ்வு!

மேலோட்டமாகப் பார்க்கும்போது, ஒரு வகையில் மாவீரர் நாள் என்பது ஆண்டு திவசம் போன்றதாக தோற்ற மளிப்பினும் அதற்கும் இந்த மாவீரம் நாளுக்கும் இடையே நிறைய வேறு பாடுகள் இருப்பதை கண்டு கொள்ள முடியும்.

குடும்பத்தில் உள்ள ஒருவர், தன் வாழ்நாள் பயணத்தை முடித்து மறைந்து போதல் இயற்கையின் நியதி. ஆனால், ஓர் இனத்துக்காக தன்னை ஆகுதியாக்கிக் கொள்ளும் ஒருவரை அவர் எந்த மண்ணிற்காகப் போராடிச் சாவடைந்தாரோ, அதே மண் ணில் அவரை விதையாக விதைத்து, அந்த நினைவு நாளை வருடத்தில் ஒரு தடவை மக்களால் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்படு வது மாவீரர் நாள்!

இந்த மாவீரர் நாளில் தான் ஒவ் வொரு மாவட்டங்களிலுமுள்ள பிர தேசங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் உயிர்ப்புக் கொள்ள ஆரம்பிக்கின்றன. மஞ்சள் மற்றும் சிவப்பு வர்ணக்கொடிகளாலும் மாவிலை, தோர ணங்களாலும் துயிலுமில்லங்கள் அலங்கரிக்கப்பட்டு, வித்தாகிபோன வீரர்களின் உறவுகள், நண்பர்கள், விடுதலை விசுவாசிகள், பொதுமக்கள் என பலதரப்பட்டவர்களால் நிறைந்து



காணப்படும்.

உரியநேரத்தில் ஆலயமணிகள் ஒலிக்கப்பட்டு, அகவணக்கம் செலுத் தப்பட்டுச் சாவடைந்தவர்களுக் கான பொதுச்சுடர் ஏற்றப்படும். ''தாயகக் கனவைத் தோள்மீது தாங்கிய சந்தனப் பேழைகளே...'' என்ற எழுச்சிப்பாட லுடன், வீரர்களது உறவுகளின் கண் ணீரும் அழுகை ஒலியும் ஒன்றறக் கலந்து காற்றோடு கரைந்து போகும்.

2009-மே, 18 ஆம் திகதி முள்ளி வாய்க்காலில் புலிகள்இயக்கத்துடனான போரை இலங்கை இராணுவம் முடிவுக் குக் கொண்டு வந்த பின்பு, வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இருந்த அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களும் படையி னர் வசமாகின.

ஓர் இனத்தின் விடுதலைக்காகப் போராடி, களத்தில் வீரச்சாவடைந்து மண்ணுள் வித்தாகி, விழிகள் மூடி துயில் பவர்களின் மேல், இராணுவம் முகாம் அமைத்து இருக்கின்ற போதும், அந்த மாவீரர்கள் பற்ற வைத்த 'நெருப்பு' இன்னமும் தணிந்த பாடாக இல்லை என்பதை இலங்கை அரசியல் வரலாற்றில்இப்போது காணக்கூடியதாக இருக்கின்றது.

''மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழ்ஈழம் மலரட்டும்...'' எனத் தியாகி திலீபன் கூறியமை போன்று, இராணுவத்தால் ஆக்கிரமிக் கப்பட்டிருந்த சில துயிலுமில்லங்கள் மக்களது தொடர் போராட்டத்தால் விடு விக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறாக, விடுவிக்கப்பட்ட இந்தத் துயிலுமில்லங்களில் போருக்கு முன்னைய கால எழுச்சி நிகழ்வுகளைப் போல் இல்லாவிட்டாலும், மண்ணுக் காய் மரித்த தமது பிள்ளைகளை இன் றைய தினம் அவர்களது பெற்றோர், மனதுள் நினைந்துருகி, நெய்விளக் கேற்றி ஆராதித்துக் கொள்வார்கள்.

தமது பிள்ளைகள் மாவீரர்கள்! விடு தலை வீரர்கள்! என்ற பெருமையையும் பூரிப்பையும் ஒன்று சேர்த்து கண்களில் இருந்து வழியும் அழுநீர், ஆனந்த கண்ணீருக்கு நீருக்குமப் பால் உவகை கொள்ளுவதை அவர்களின் முகங்களில் இருந்து காண முடியும்.

''மாவீரர்கள் இறப்பதில்லை! அவர் கள் மக்களுடன் வாழ்கிறார்கள் என்ற தலைவர் பிரபாகரனின் வார்த்தை களானவை...

மக்களது கரங்களுக்குள் வசப்பட்ட துயிலுமில்லங்களில் இன்றைய தினம் மீண்டும்... மெய்ப்பிக்கப்பட்டு வர லாற்றில் ஒரு பதிவாக அமைவதைக் காணமுடியும்!



# வீரகாவியம் படைத்த தமிழ் மறவர்களின் மாவீரர் நாள் இன்று



– சி.சிறிதரன் எம்.பி.–

தமிழர் தம் வாழ்வோடு, அவர் தம் வரலாற்றோடு, ஆன்ம உணர்வுகளோடு ஊறி ஒரு மித்து, நெஞ்சமெங்கும் நிறைந்து நிற்கும் புனிதமான நாளே மாவீரர் நாள். இந்தநாள் ஆயிர மாயிரம் சுதந்திரச் சுடர்களாக,எமது விடுதலைக் கோவிலை அலங்கரித்து நின்ற மாவீரர்களைப் போற்றி வணங் கும் புனிதநாள்.

இது சாவுக்கு கலங்கியழும் சோக நாளோ அன்றி துயரத்தில் உறைந்து போகும் துக்கநாளோ அல்ல. தியாகிக ளின் திருநாள். ஒரு சத்திய இலட்சியத் திற்காக தம் இன்னுயிரை ஈகம் செய்த எம்மின வீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும்; ஒப்பற்ற தியா கங்களையும்,அற்புதமான அர்ப் பணிப்புக்களையும் நம் நெஞ்சப்பசுமை யில் நினைவுகூரும் உணர்வெழுச்சி நாள்.



அவர்களது வீரத்திற்கும், அதியுன்னத தியாகத்திற்கும் தமிழர்களாகிய நாம் இன்றும், என்றும் தலைவணங்குவோம். ஈடிணையற்ற ஈகங்கள் மூலம் தாயக விடுதலைக்காய் தமிழர்கள் கொடுத்த விலை தன்னிகரற்றது. எமது மக்கள் இறைமை பெற்று பெருமையுடன் வாழ வேண்டுமென்ற இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றிலேயே ஒப்பற்றவை.

மூன்று தசாப்தமாக மூண்டிருந்த விடுதலைப் போரில் மாவீரர்களின் மாசற்ற தியாகமே ஒப்பற்ற சாதனைகளை உருவாக்கியிருந்தது. தமிழீழ மக்களின் தேச விடுதலைப் போராட் டத்தை சர்வதேச மயப்படுத்தி உலகத்தின் கவனத்தை எங்கள் மீது திசை திருப்பியதும் மாவீரர்களின் மகாவீரமே!

எந்த ஒரு நாட்டிலும் எந்த ஒரு காலத்திலும், எந்த ஒரு போராட்டத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்கள் எமது மண்ணில், எமது போராட்டத்தில் எமது மாவீரர்களால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. எந்தவொரு மானிட வரலாறும் இன்றளவும் கண்டிராத வீரகாவியம் எமது மாவீரர்களால் எமது மண்ணில் படைக்கப்பட்டிருக்கிறது.

நீண்டகாலமாக நெருப்பாக எரிந்து கொண்டிருந்த தமிழரின் விடுதலை எழுச்சிக்காக, துரோகங்களுக்கும், துன்பியல்களுக்கும் மத்தியில் எந்த வித உதவியுமின்றி, எவரது ஆதரவுமின்றி தமது பலத்திற்கு மிஞ்சிய பெரும் சக்திகளுக்கெதிராக தனித்து நின்று போராடும் நிலை ஏற்பட்டபோதும், தளராத துணிவோடு களமாடி தமது இன்னுயிர்களை ஈய்ந்து தேச விடுதலைத் தீயை அணையாது காத்த அகல்விளக்குகளாகிய மாவீரச் செல்வங்களை தமிழர்கள் தங்கள் காவல் தெய்வங்களாகவே காலம் காலமாய் கௌரவித்து வருகிறார்கள்.

நீண்டு நிகழ்ந்த எம் விடுதலைப் பயணத்தில் பல்வேறு நெருப்பாறுகளை நீந்திக்கடந்த நாம் அந்த அக்கினிப் பிரவேசங்களில் அழிந்து போகாமல் நிலைத்து நிற்பதற்கு மாவீரர்களின் இலட்சிய உறுதியே காரணமாகும்.

அடக்குமுறைக்கு ஆளாகி இன்று மாபெரும் இன அழிவைச் சந்தித்து நிற்கும் எமக்காகத் தன்னாட்சி கோரி மாவீரர்கள் வரித்துக் கொண்ட இலட்சியம் நேரானது, நிலையானது,நியாயமானது என்பதாலேயே மக்கள் மனங்களில் மாவீரர்கள் இன்றளவும் புனிதர்களாய் பூசிக்கப்படுகிறார்கள்.

கொண்டகொள்கையே அவர்களது மலையான பலம். அந்த மலையான பலத்தில் நிலையாக நின்றமையே விடு தலைப்புலிகள் அமைப்புக்கென ஒரு தனித்துவத்தையும்,சிறப்பான சரித்திரத்தையும் ஏற்படுத்தியது. உலக வல்லரசு ஒன்றின் இராணுவ வல்லாதிக்கம் பலமாக நெருக்கியபோது கூட இலட்சியத்தை தளரவிடாது, நெஞ்சுறுதியோடு நிமிர்ந்து நின்று போராடி, ஆபத்தான கட்டத்திலும் உறுதி ஒன்றையே தமது இறுதி ஆயுதமாகக் கொண்டு உலகின் மிகப்பெரிய ஆயுத பலத்தையே எதிர்கொண்டு எழுந்து நின்ற வீர மறவர்களை நெஞ்சிருத்தி அஞ்சலிப்பதை தமிழர்கள் ஒவ்வொருவரும் தமது தலையாய கடமையாகவே கருதுகிறார்கள்.

மாவீரர்கள் சமாதானத்தின் விரோதிகளோ அன்றி சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிரானவர்களோ அல்லர். அவர்கள் வேண்டியது உண்மையான, உறுதியான சமாதானத்தையே! எமது மக்கள் எமது மண்ணில் நிம்மதியாக, சுதந்திரமாக, அந்நியத் தலையீடுகள் ஏதுமின்றி அமைதியாக வாழ்ந்து, தமது அரசியல் வாழ்வை தாமே தீர்மானிக்கக் கூடிய நிரந்தரமான சமாதானத்தையே அவர்கள் வேண்டி நின்றார்கள். ஆனபோதும் சிங்கள, பௌத்த பேரினவாதத்துள் ஆழ அமிழ்ந்திருந்த அரசமைப்புக்களும், அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒரு போதும் புரிந்துகொள்ளவில்லை.

சிங்களதேச பிரதான அரசியல் கட்சிகள் எவையும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை. வடக்கு –கிழக்கு மாநிலம் தமிழர்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான இனக்கட்டமைப்பைக் கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ, தமிழீழ மக்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளவுமில்லை.

## துயரத்தில் உறைந்து நிற்கும் நாளல்ல; அற்புதங்கள் புரிந்த தியாகிகளின் திருநாள்!

ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவுமில்லை.

இந்த நிலையிலேயே எமக்கான





உரிமைகள் கிடைப்பதற்கான ஏதுக்கள் ஏதுமில்லை என்பதால் நாமே எமது உரிமைகளைப் போராடி வென்றெடுக்க வேண்டும் என்றும்; போராடாது, இரத்தம் சிந்தாது, சாவையும் அழிவையும் சந்திக்காது, தியாகங்கள் புரியாது எந்தவொரு தேசமும் விடுதலை பெற்ற தாய் வரலாறு இல்லை என்பதையும் புரிந்துகொண்டு ஆக்கிரமிப்பாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி அவலக் குரல் எழுப்பி நின்ற தமது மக்களின் துயரக் கண்ணீரைத் துடைத்தெறிய உறுதியெடுத்து,பணிந்து போகாது, தமது இரத்தத்தை இரையாக்கியேனும் இலட்சியத்திற்காக போராடுவோம் எனத் துணிந்து போராடிய தூய வீரர்களை என்றென்றும் எம் நெஞ்சிருத்துவோம்.

அவர்தம் இலட்சியக் கனவுகள் எவையும் எட்டப்படவில்லை எனினும் மூன்று தசாப்தம் முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப்போருக்கு ஓய்வுகொடுத்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டபோதும் போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப் பிரச்சினைக்கு முடிவுமின்றி, விடிவு, விடுதலை, எதிர்கால சுபீட்சம் எதுவுமின்றி சூனியமான அரசியல் வெறுமைக்குள்ளேயே நாம் இன்றளவும் வாழ்ந்துவரும் இந்த வேளையிலும், மண்ணின் விடிவுக் காய், மக்களின் விடுதலைக் காய் கள மாடி வீழ்ந்த மறத்தமிழ் மாவீரர்களை எம் நெஞ்சிருத்தி அஞ்சலிப்பதில் அவர் தம் வீரப் பரம்பரையில் வந்து தித்த தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஆத்ம திருப்தி அடைகிறோம். ★



காலைக்கதிர் Kalaikkathir



# நாடு துண்டாடப்படாமல் இருக்க வேண்டுமானால் அதிகாரப் பகிர்வு அவசியம்

## - அமைச்சர் ஹக்கீம்



**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவை, விடியும் வேளை நிகழ்ச்சியில் வியாழக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வழங்கிய நேர்காணலிலிருந்து.**

(நேற்றைய தொடர்ச்சி...)

நாடாளுமன்றம் போன்ற இடங்களில் வெறும் 5 வீதத்திற்கு குறைவாக பெண்களின் பிரதிநிதித்துவம் இருக்கின்ற போது அது சம்பந்தமாக பெண்ணியியல் வாத இயக்கங்கள் பலத்த போராட்டங்களை நடத்தி வந்தன. எனவே, இது ஒரு நல்லதொரு மாற்றமாகும். இதை இயலச் செய்வதும் இதை ஊக்குவிப்பதும் இதை அர்த்த புஷ்டியான விடயமாக மாற்றுவதும் அரசியல் கட்சிகளுக்கிருக்கின்ற ஒரு தார்மீகப் பொறுப்பு. அதை நாங்கள் எல்லோரும் செய்ய ஆரம்பித்திருக்கின்றோம். எடுத்த எடுப்பிலே செய்யப்படுகின்ற போது அது கஷ்டமான காரியமாகும். பெண்களை அரசியலுக்கு வர சம்மதிக்க வைப்பதே ஒரு கடினமான விடயம். ஆனால் இயல்பாகவே முன் வருபவர்களும் கணிசமான தொகையினர் இருக்கின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலின் நியதிகளின் பிரகாரம் நாங்கள் பெண்களுக்கு எங்களுடைய நியமனப் பத்திரங்களில் அந்த இடங்களை நாங்கள் ஒதுக்கியாக வேண்டும். பெண்களை அதில் நியமித்தாக வேண்டும் என்ற நியதியிருக்கின்ற போது அதில் இருந்து நாங்கள் தப்பிக்க முடியாது. அதேநேரம் மக்கள் செல்வாக்குள்ள பெண் வேட்பாளர்களைத் தேடி நிறுத்துவதென்பதுதான் சவாலான விடயம்.

யாருக்கு செல்வாக்கு இருப்பது என்பதை கண்டுபிடிப்பதே ஒரு தனியான விவகாரமாகும். எனவே, இந்த விவகாரங்களுடைய விடயங்களிலே எங்களுடைய கட்சிக் கிளையினர் ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்த முயற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் இதற்கான தயார்ப்படுத்தலை செய்ய வேண்டும்.

**சாக்கடையை நீரோடையாக மாற்ற வாருங்கள்**

ஐரோப்பிய நாடாளுமன்றங்களில் நிறைய பெண் உறுப்பினர்கள் தெரிவாகின்றார்கள். அதேநேரம் அந்த நாடுகளில் தேர்தல்களில் வாக்களிக்கின்ற விகிதாசாரம் மிகக் குறைவாக இருக்கின்றதை நாங்கள் அவதானிக்கலாம். எனவே ஒட்டு மொத்தத்தில் பெண்களுடைய அரசியல் பிரதிநிதித்துவம் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்கு முழு ஒத்தாசையும் அளிக்க வேண்டும். நானும் பெண்களிடம் விநயமாக வேண்டுகோள் விடுக்கின்றேன். அரசியலுக்கு வாருங்கள் அரசியலை ஒரு சாக்கடையாக பார்க்கின்ற வழமையான பார்வை இருக்கின்றது. இதிலே நாங்களும் போய் விழவேண்டுமா என்று நினைக்காமல் இந்த சாக்கடையை நல்ல சுத்தமான நீரோடையாக மாற்றுவதற்கு பெண்களுடைய வருகை உதவியாக இருக்கும் என்பதை மனதில் கொண்டு ஆர்வம் காட்ட வேண்டும்..

வடகிழக்கு இணைப்பு என்பது நீண்ட காலமாக தமிழ்த் தரப்பினால் முன்வைக்கப்பட்டு வந்த ஒரு கோரிக்கை என்ற அடிப்படையில் அதற்கு உரிய கௌரவத்தை கொடுக்க வேண்டிய கடப்பாடு தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கு இருக்கின்றது. அது சம்பந்தமாக வருகின்ற பாதிப்புகள் பற்றி நாங்கள் பேசலாம். ஆனால் வரிந்துகட்டிக் கொண்டு அதை எதிர்காமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பொதுவான கொள்கையில் இருந்து வந்திருக்கின்றது.

எங்களைக் கேட்காமல் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் போது 1987ஆம் ஆண்டு ஜே.ஆர்.ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது கிழக்கு மாகாணத்தில் ஐந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இருந்தார்கள். இந்த ஐவரும் இருக்கத்தக்கதாக அவர்களிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் திடீரென்று ஜே.ஆர் ஜயவர்த்தன ஒரு தற்காலிக வடகிழக்கு இணைப்பிற்கு கைச்சாத்திட்டு விட்டார் என்பது காரணமாக முஸ்லிம்கள் மத்தியில் பலத்த ஆட்சேபனைகள், கண்டனங்கள் எழுந்தன.

ஏனென்றால் அவர்களை பஞ்சவர்ணக் கிளிகள் என்றுகூட பேச ஆரம்பித்தார்கள். ஏனென்றால் வாய்பேசா கிளிப்பிள்ளைகளாக அவர்கள் இருந்துவிட்டார்கள் என்றெல்லாம் விமர்சனங்கள் எழுந்தன. இந்தப் பின்னணியில் தான் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது.

இந்த வடகிழக்கு ஒன்றாக மாற்றப்பட்டதன் பின்னணி எல்லோருக்கும் தெரிந்த விடயம் கிழக்கிலே அன்று 33 சதவீதத்திற்கு மேலிருந்த முஸ்லிம்கள் வெறும் 17 சதவீதமாக ஆக்கப்பட்டு விட்டார்கள். இரவோடு இரவாக இந்த விடயம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. எதிர்ப்பலைகளை உருவாக்கியது.

அந்தப் பின்னணியில் முஸ்லிம் காங்கிரஸ் அந்த விடயத்தை கையாண்டபோது வடகிழக்கு இணைந்த வடகிழக்குக்கான மாகாண சபையாக இருந்ததால் அதில் முஸ்லிம்கள் பங்குபற்றக்கூடாது என்று எல்லோரும் பேசிக்கொண்டிருந்த போது தைரியமாக முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் நாங்கள் ஒரு நிபந்தையுடனான வடகிழக்கு இணைப்பு சம்பந்தமாக பேசுவது என்ற உறுதியோடு அந்த மாகாண சபையில் எங்களது கட்சியை பங்கெடுக்கச் செய்தார்.

அன்றிருந்த சட்ட ரீதிகளின் பிரகாரம் அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இந்த தற்காலிக இணைப்பு என்பது செய்யப்பட்டிருக்கின்ற பின்னணியில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கில் ஒரு வருடத்திற்குள் நடத்தப்பட வேண்டும் என்ற ஓர் ஏற்பாடு இருந்தது. ஆனால், சர்வஜன வாக்கெடுப்பை ஒவ்வொரு வருடமும் ஜனாதிபதிகள் வெறும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிற்போட்டுக்கொண்டு வந்தனர். முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி சரத் என் சில்வா தலைமையில் அந்த நீடிப்பு செல்லுபடியற்றது என்ற விவகாரம் நிறைவேற்றப்பட்ட பிறகு இப்பொழுது தற்காலிகமாக இணைந்திருந்த மாகாணங்கள் பிரிந்திருக்கின்றன.

எனவே, இது மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பம்; அபிலாஷை அதை அவர்கள் அடிக்கடி பேசிவருகின்றார்கள். எனவே இது சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது. ஏனென்றால் நாங்கள் இதில் ஒரு விதமான மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கின்றோம் என்று சொல்லுகின்றார்கள். இதில் எங்களுக்கு கொள்கை ரீதியான சில முரண்பாடுகள் இருந்தாலும் சந்தர்ப்பம் வருகின்ற போது அவற்றைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம். அரசியல் என்பது சாத்தியமானவற்றை சாதிக்கின்ற கலை எனவே இந்த விடயங்கள் சாத்தியமாகின்ற போது அவற்றைப்பற்றி நாங்கள் பேசலாம். சாத்தியமானவற்றுக்கான பின்புலன் எப்படி இருக்கின்றது என்பது பற்றி சிந்திக்காமல் கூடுதலாக கூப்பாடு போட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. மக்களுடைய உணர்வுகளை கிளறிவிட்டு அதில் குளிர்காயவதற்கான அரசியலைச் செய்வது அவ்வளவு ஆரோக்கியமான விடயமல்ல.

**வக்குரோத்து அரசியல்**

ஏனென்றால் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் இப்படிப் பேசுகின்றார்கள். உணர்வுபூர்வமாக எதையும் பேசிவிட்டால் மக்கள் தங்களுக்கு வாக்குகளை அள்ளிப் போடுவார்கள் என நினைக்கின்றார்கள். கடந்த தேர்தலில் தோல்வியுற்று தேசியப்பட்டியல் மூலம் பின்கதவால் நாடாளுமன்றம் நுழைந்தவர்கள் தான் இப்படிப் பேசுகின்றார்கள். உணர்ச்சிபூர்வமாக இப்படிப் பேசினால் தான் அடுத்த தேர்தலில் மக்கள் வாக்குகளை அள்ளிப் போடுவார்கள் என அவர்கள் நினைக்கிறார்கள். இது வங்குரோத்து அரசியலின் மொத்த வடிவம். இதை இப்படி பேசாமல் ஆரோக்கியமாக அழகாகச் சொல்லலாம். வடகிழக்கு இணைப்பிலே முஸ்லிம்களின் பாதிப்புக்களை சரி செய்வதற்கு அல்லது வடகிழக்கு இணைப்பு சம்பந்தமாக அவர்களுடைய ஆட்சேபனைகளை அதற்கான காரணங்களை இன்னும் ஆரோக்கியமாக பேசுவதற்கு வழிகள் இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அண்ணன் சம்பந்தன் அடிக்கடி சொல்லுகின்ற விடயம், முஸ்லிம்களுடைய சம்மதமில்லாமல் வடகிழக்கு இணைப்பை தாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதாகும். முஸ்லிம்களுடைய முழு சம்மதத்துடன் தான் அதை செய்வதற்கு தயாராக இருக்கிறேன் என அவர் கூறுகின்றார். இப்படி பேசிகின்றபோதே கடந்த காலத்தில் நடந்தது போல நடக்கப் போவதில்லை என்பதையிட்டு நாங்கள் ஓரளவு ஆறுதலடையலாம்.

அதேநேரம் முஸ்லிம் காங்கிரஸ் எங்களுடைய ஆலோசனைகளில் 9 மாகாணங்களாக இருப்பது என்பது சம்பந்தமாக ஆதரவைத் தெரிவித்திருக்கின்றோம். அதேவேளை இது இடைக்கால அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாணங்கள் இணைவதாக இருந்தால் குறித்த மாகாணத்தில் மக்களுடைய சம்மதம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பெறப்பட வேண்டும் என்ற நியதி சட்டத்தில் இருக்கின்ற நியதி. அது மாத்திரமல்ல அதற்கு அப்பால் இரண்டு மாகாணங்கள் சேர்வதென்பதை அந்த இரண்டு மாகாணத்திலுள்ள மக்கள் மாத்திரம் தீர்மானிக்க முடியாது.

அதற்குப் பிறகு நாடாளுமன்றத்தில் அது அறுதிப் பெரும்பான்மையோடு அங்கீகரிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் இருக்கின்ற 225 உறுப்பினர்களில் இன்று 50 உறுப்பினர்கள் தான் சிறுபான்மை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதில் முஸ்லிம் உறுப்பினர்கள் 21 பேர் இருக்கின்றார்கள். இப்படி இருக்கத்தக்காக சிங்கள உறுப்பினர்கள் 175 பேர் இருக்கின்றார்கள். அப்படிப் பார்க்கின்ற போது எப்படியோர் அறுதிப் பெரும்பான்மையோடு இந்த விடயம் சாத்தியமாகும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

எனவே, வெறும் முஸ்லிம்களின் சம்மதங்கள் மாத்திரமல்ல, நாட்டு மக்களும் சம்மதம் தெரிவிக்க வேண்டும். எனவே தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் போய் இந்த விடயமாக பேசுகின்றார். நீங்கள் இந்த அரசமைப்பு ஆலோசனைகளில் கொஞ்சம் கருணை காட்ட வேண்டும் என்கிறார். இதில் வெறும் வடகிழக்கு மாத்திரம் தான் பிரச்சினை என்பதல்ல. இதைவிடவும் பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன.

எனவே, மிகப் பெரிய பூதாகரமான பிரச்சினையாக ஆக்கி ஏதோ தமிழ் தலைமைகள் முஸ்லிம்களை அடிமையாகப் பார்க்கின்றார்கள் என்ற மாதிரி பேசித்திரிவதன் மூலம் வெறும் அரசியல் பிழைப்பு நடத்துகின்ற இது பிழைப்புவாத அரசியல் என்பதை மக்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும்.

ஏனென்றால், முஸ்லிம்கள் அரசியல் முதிர்ச்சியுள்ளவர்கள். இவ்வாறான உணர்ச்சிவசப்படுகின்ற பேச்சுக்களுக்கு அள்ளுப்பட்டு போக மாட்டார்கள். முஸ்லிம்கள் மிக நிதானமாக இதைப்பற்றி சிந்திக்ககூடியவர்கள் என்று நாங்கள் நினைக்கின்றோம்.

அதிகாரப்பகிர்வு என்பது வெறும் தமிழ் முஸ்லிம்களுக்கு மாத்திரமல்ல. அரசமைப்பு சீர்திருத்த நாடாளுமன்ற வழிநடத்தல் குழுவில் நானும் உறுப்பினர் ஒருவராக இருக்கின்ற படியால் எங்களுடைய குழவிற்கு முன்னால் வந்து தெற்கிலுள்ள எல்லா முதலமைச்சர்களும் இருக்கின்ற அதிகாரங் களை கூட்டித்தருமாறுகேட்டார்கள். ஆளுநர்தலையீடுகளை குறையுங்கள் என்றார்கள். மத்திய அரசின் தலையீட்டைக் குறைக்கச் சொன்னார்கள். இந்த நாட்டில் அதிகாரப்பகிர்வு கலாசாரம் ஒன்று வந்து விட்டது. இதனை இனி இல்லாமல் செய்ய முடியாது. சில தீவிரவாதக்குழுக்கள் இதனால் நாடு துண்டாடப்பட்டு விடுமென்று பீதியை உருவாக்குகின்றார்கள்.

அவ்வாறல்ல, உண்மையில் நாடு துண்டாடப்படாமல் இருக்க வேண்டுமானால் அதிகாரப் பகிர்வு வேண்டும். ஆகையால் யதார்த்தபூர்வமாக இது பற்றி சிந்திப்பது அனைவரதும் தார்மீக கடமையாகும். இது அரசியல் தலைமைகளுக்குள்ள மிகப் பெரிய பொறுப்பும் ஆகும். இதனை அடுத்த சந்ததியினருக்கு விட்டுச் செல்ல முடியாது. ஏனென்றால் ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் பலியாகிவிட்டன. ஒரு ஜனநாயக நாட்டில் தங்களது உரிமைகளையும், தேவைகளையும் பகிரங்கமாகக் கேட்பதில் எந்தத் தவறுமில்லை. எனவே புரிந்துணர்வோடு இந்த விடயங்களை அணுக வேண்டியது அவசியமாகும். ★

# ஏற்றம் தரும் எலுமிச்சை



**மரம் மனிதனின் சுவாசம், மரம் பறவைகள் சரணாலயம், மரம் வழிப்போக்கனின் கூடாரம், மரம் பழங்கள் தரும், பலன்கள் தரும், நிழல் தரும், மழை தரும், மனிதன் காடு வரை செல்ல கூடவே வரும்**

**தாவரவியல் பெயர் -** சிட்ரஸ் அவ்ரான்டிபோலியா citrus aurantifolia

**தாவரக் குடும்பம் -** ரூட்டேசியே Rutaceae

தமிழர்களாகிய எமது சமய கலாசார சுப காரியங்களில் முதல் இடம் வகிப்பது எலுமிச்சம் பழமாகும். எலுமிச்சையின் தாயகம் தென் கிழக்காசிய நாடுகளாகும். பெரும்பாலும் வெப்ப மற்றும் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் இது வளர்கின்றது. இருப்பினும் வெப்ப வலயங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்கையில் நீர்ப்பாசனம்மேற்கொள்ளல் அவசிமாகும். குறுஞ் செடி வகைத் தாவரமாக எலுமிச்சை அறியப்படுகிறது. இத் தாவரத்தின் பழமானது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

நீள் வட்ட வடிவ, மஞ்சள் நிறமுடைய பழமானது பல சோணைகளை கொண்டதாக காணப்படும். இச் சோணைகளில் சேமிக்கப்பட்டுள்ள பழச்சாறானது பிரித்தெடுக்கப்பட்டு சமையல் மற்றும் சமையல் அல்லாத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. உணவு மற்றும் சுத்திகரிப்பிற்காக எலுமிச்சம் சாறு பயன்படுத்தப்படுகின்றது. முதன்முதலாக 1784 இல் கார்ஸ்வில் ஹெம்மீலி என்பவர் எலுமிச்சையில் சிட்ரிக் அமிலம் இருப்பதைக் கண்டுபிடித்தார். இதில் சுமார் 5% முதல் 6% சிட்ரிக் அமிலம் உள்ளது. இப் புளிப்புச் சுவை எலுமிச்சைப் பானம் போன்ற உணவுகளில் ஒரு முக்கிய மூலப் பொருளாக அமைய காரணமாக அமைகிறது.

கண்களைப் பறிக்கும் மஞ்சள் நிறத்தில் மங்களகரமாய் காட்சிதரும் எலுமிச்சைப் பழத்தில் விட்டமின் சி சத்து மற்றும் கல்சியச் சத்து அதிகம் நிறைந்துள்ளது.

**100 கிராம் எலுமிச்சை பழத்தில்**

நீர் - 50 கிராம்
கொழுப்பு - 1.0 கிராம்
புரதம் - 1.4 கிராம்
மாப்பொருள் - 11.0 கிராம்
நார்ச்சத்து - 1.2 கிராம்
கல்சியம் - 0.80 மி.கி.
விட்டமின் சி - 63.0 மி.கி. போன்றவை காணப்படுகின்றன.

தேசிச் செய்கைக்கு நீர் வடிப்புள்ள சேதனப்பொருள்கள் நிறைந்த இருவாட்டி மண் உகந்தது. மண்ணின் ஆழம் 2 மீற்றர் ஆகவும் மண் pH 5-6 வரை இருத்தல் நன்று. தேசிப் பயிர்ச் செய்கையில் நடுகைப் பொருள்களாக வித்து மூலம் இனம் பெருக்கப்பட்ட நாற்றுக்கள், ஒட்டுதலின் மூலம் இனம் பெருக்கப்பட்ட நாற்றுக்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

நாற்றுங்கள் தோட்டத்தில் 4 மீற்றர் X4 மீற்றர் இடைவெளியில் நடுகை செய்யப்படும்.

60 செ.மீ. நீள அகல ஆழமுள்ள குழிகள் வெட்டப்பட்டு நடுவதற்கு இரு கிழமைகளுக்கு முன்னதாக மேல் மண், கூட்டெரு என்பன 1:1 என்ற விகிதத்தில் கலந்து நடுகைக் குழி நிரப்பப்படும். பின்பு நாற்றின் மண் மட்டமும் நிலத்தின் மண் மட்டமும் ஒன்றாக இருக்கக் கூடியவாறு நடுதல் வேண்டும்.

எலுமிச்சை பயிர்ச்செய்கையில் சிறப்பான முகாமைத்துவத்துக்கு கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் அவசியமானதாகும். ஆரம்பத்தில் நில மட்டத்திலிருந்து 60 - 75 செ.மீ. உயரம் வரை பக்கக் கிளைகள் எவற்றையும் அனுமதிக்காது தனி மரமாக வளர்க்க வேண்டும். அதன் பின்பு முதலாவது கிளையை வளர அனுமதிக்க வேண்டும். இரண்டாவது கிளையானது முதற்கிளையில் இருந்து 15 செ.மீ. உயரத்தில் அதன் எதிர்த்திசையில் அனுமதிக்கப்படும். இவ்வாறே மூன்றாம், நான்காம் கிளைகளும் ஒரு சுற்றுவட்ட ஒழுங்கில் அமையுமாறு வளர விடப்படும். இறுதியாக மரம் 2 மீற்றர் உயரத்தை அடைந்தவுடன் அதன் நுனி அரும்பை அகற்றி உயரம் மட்டுப்படுத்தப்படும். இடையிடையே தோன்றும் நீர்வாதுக்கள் கூரிய கத்திகள் மூலம் அகற்றப்படும். இவ்வாறு ஏற்பட்ட காயங்களுக்கு போடோ கலவை இடப்பட்டு தொற்றுதலிலிருந்து பாதுகாக்கப்படும்.

இவ்வாறு பராமரிப்பு நடவடிக்கைகளை சரிவர மேற்கொண்டு வர மூன்றாவது வருடத்திலிருந்து அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**மருத்துவக் குணங்கள்**

மருத்துவர் ப்ளென்னின் (1875) ஆராய்ச்சியில் கெட்ட இரத்தத்தைத் தூய்மைப்படுத்தும் மருந்துகளில் எலுமிச்சையை விட சிறந்தது வேறு இல்லை எனக் கண்டறிந்தார். இரண்டாவது உலகப் போரின் போது ஜேர்மனிய வீரர்களின் காயத்தில் இருந்து ஒழுகும் இரத்தத்தை உடனடியாக நிறுத்த எலுமிச்சையை உபயோகப்படுத்தினார் எனக் கூறப்படுகிறது. மேலும் எலுமிச்சை

★உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது.

★பசியைத் தூண்டுவதுடன் சமிபாடடைதலையும் இலகுவாக்கும்.

★மலச்சிக்கலை நீக்க உதவும்.

★சிறந்த தொற்று நீக்கியாகத் தொழிற்படும்.

★தடிமனை குணப்படுத்த உதவுகின்றது.

**எலுமிச்சைத் தோல்**

எலுமிச்சைப் பழத்தின் தோல், தோல் சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்கிச் சருமத்துக்கு பளபளப்பைத் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். எலுமிச்சம் பழத்தோலில் அதிக சக்தி கொண்ட எண்ணெய் இருப்பதை அறிந்தனர். இது பலவகையான நறுமணத் தைலங்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. மேலும் வாதம், எரிச்சல், தொண்டைப் புண் போன்றவற்றுக்கு அருமருந்தாக தொழிற்படுகின்றது.

இவ்வாறான பல்வேறு மகத்துவம் நிறைந்த இலாபம் தரும் எலுமிச்சையைப் பயிர் செய்து வாழ்வில் நாமும் ஏற்றம் பெறுவோம்.

**கி.ஸ்கொட் பீலன்**
விவசாயப் போதனாசிரியர்.
கரவெட்டி.



# ஆரோக்கிய வாழ்விற்கு நெல்லி

**தமிழ்ப் பெயர் -** பெருநெல்லி
**பொதுப் பெயர்-** நெல்லி (Amla)
**தாவரவியற் பெயர்-**Phyllanthu emblica L (பைலாந்தஸ் எம்பிலிகா)
**குடும்பம்-** Euphorbioceae (யுபோர்பியேசு)

நெல்லி அயன மண்டல வலயங்களில் காணப்படும் தாவரமாகும். இதன் பூர்வீகம் நேபாளத்தின் இமாலயப் பிரதேசங்கள், இந்தியாவின் வட பிரதேசங்களோடு தெற்கு வரையிலும் இந்து சமுத்திர நாடுகளிலும் பரவலடைந்து காணப்படுகின்றது. இலங்கையில் உலர் இடை வலயங்களிலும் விசேடமாக பிபிலை, பதுளை, மொனராகலை, கல் ஓயா, புத்தளம், அனுராதபுரம், இரத்தினபுரி, பொலன்னறுவை, வவுனியா போன்ற பிரதேசங்களில் வனாந்தரங்களில் இயற்கையாக வளர்ந்திருப்பதைக் காணலாம்.

நெல்லிக்காய் விட்டமின் சி அதிகமாகக் கொண்ட பழம் ஆகும். நெல்லி தாவரத்தின் சகல பகுதிகளும் மருத்துவக் குணம் கொண்டதோடு போசணை மிகுந்ததாகும். இது கசப்பு, இனிப்பு உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு போன்ற ஐந்து சுவைகளையும் கொண்டுள்ளது. இந்தப் பழத்திலிருந்து பல்வேறு உற்பத்திகளைத் தயாரிக்க முடியும்.

நெல்லி பயிர் செய்வதற்கு இலகுவானதொரு பயிராகும். இது குறைந்த பராமரிப்பின் கீழ் நன்கு வளரும். இலங்கையில் வீட்டுத் தோட்டப் பயிராக பயிரிடுவதோடு இதன் பழம் சந்தையில் வருடம் முழுவதும் காணப்படுகின்றது.

**இனப்பெருக்கம்**

விதைகள் மூலம் இனப்பெருக்கமடையும் போது வித்தியாசமான இயல்புகளைக் கொண்ட நாற்றுக்கள் பெறப்படுகின்றன. எனவே, ஒட்டுதல் வேர் துண்டங்களை முளைக்க வைத்தல் மூலம் உயர்தர இயல்புகளைக் கொண்ட நாற்றுக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

**நடுகை**

நாற்றுக்களை 6-7 மீற்றர் இடைவெளியில் மழை காலம் ஆரம்பத்துடன் நடலாம். ஏக்கர் ஒன்றுக்கு 110 நாற்றுக்கள் போதுமானது.

**போசணைப் பெறுமானம்**

100 கிராம் நெல்லி சதைப் பகுதியில் அடங்கியுள்ள போசணைக் கூறுகளும் அதன் பெறுமானங்களும்

| போசணைக் கூறுகள் | போசணைப் பெறுமானங்கள் (கிராம்) |
|---|---|
| சக்தி | 58 கலோரி |
| நீர் | 81.3 கிராம் |
| புரதம் | 0.5 கிராம் |
| கொழுப்பு | 0.1 கிராம் |
| காபோவைதரேற் | 13.7 கிராம் |
| நார் | 3.4 கிராம் |
| கனிப்பொருள் | 0.7 கிராம் |
| கல்சியம் | 50 மி.கி. |
| பொஸ்பரஸ் | 20 மி.கி. |
| இரும்பு | 1.2 மி.கி. |
| விட்டமின் ஏ | 4 மைக்ரோ கிராம் |
| தயமின் | 30 மைக்ரோ கிராம் |
| ரைபோபிளவின் | 10 மைக்ரோ கிராம் |
| நியசின் | 0.2 மி.கி. |
| விட்டமின் சீ | 200- 1800 மி.கி. |

**பயன்பாடு**

★பழத்திலிருந்து நெல்லி அச்சாறு, கோடியல், பழப்பானம் என்பவற்றை தயாரிக்கலாம்.

★இலைகளை கால்நடை தீவனமாகவும், சேதனப் பசளையாகவும் பயன்படுத்தலாம்.

★நெல்லிக்காயிலிருந்து எழுதும் மை, சாயப் பொடி என்பவற்றைத் தயாரிக்கலாம்.

★நெல்லியின் மரத் துண்டுகளை கலங்கிய நீரில் போட்டு வைத்தால் நீர் தெளிந்து விடும்.

★காயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெய் முடி வளர்வதற்கு உதவுவதோடு நறுமணமும் தரும்.

**தினமும் ஒரு நெல்லிக் காய் உண்பதால் கிடைக்கும் நன்மைகள்**

★புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கும்.

★அல்சரைக் குணப்படுத்தும்.

★உடல் எடையைக் குறைக்க உதவும்.

★மலச்சிக்கல் ஏற்படுவதைத் தடுக்கும்.

★உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கும்.

★பார்வை மேம்படும்.

★நீரிழிவைத் தடுக்கும்.

★கல்லீரலின் சீரான செயற்பாட்டுக்கு உதவும்.

★மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பைத் தடுக்கும்.

**உண்ண கனி ஒதுங்க நிழல், உடலுக்கு மருந்து, உணவுக்கு விருந்து அடைய, குடில் அடைக்க கதவு, அழகு வேலி ஆட தூலி, தடவ தைலம், தாளிக்க எண்ணெய், எழுத காகிதம், எரிக்க விறகு மரம் தான் மரம் தான். எல்லாம் தான் மறந்தான். மறந்தான் மனிதன் மறந்தான்.**

**சௌந்தரநாயகம் தயாளசீலன்**
பாடவிதான உத்தியோகத்தர்
(பயிர் பாதுகாப்பு)
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மன்னார்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தல்

# நான் வெற்றி பெறுவது உறுதி; ‘இரட்டை இலை’ சின்னம் வரமல்ல

ஆர்.கே. நகர் தேர்தலில் போட்டியிட்டு நான் வெற்றி பெறுவது உறுதி என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

கோவையில் அ.தி.மு.க அம்மா அணித் துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

இரட்டை இலைச் சின்னம் தொடர்பாக ஓ.பி.எஸ் கேவியட் மனுத் தாக்கல் செய்ததை என்பது வழக்கமான நடவடிக்கை தான். நீதிமன்றத்தில் இரட்டை இலைச்சின்னம் கொடுக்கக் கூடாது என கேட்போம். இடைத்தேர்தலில் எந்தச் சின்னம் கொடுத்தாலும் பரவாயில்லை.

இடைத்தேர்தலில் சின்னம் முக்கியமில்லை. வேட்பாளர் யார் என்பதுதான் முக்கியம். ஆர்.கே.நகர் பகுதி மக்கள் தெளிவாக இருக்கின்றனர். இடைத்தேர்தலில் இரட்டை இலையை வீழ்த்தி அதை மீட்க வேண்டியிருக்கின்றது என்பதுதான் வருத்தமாக இருக்கின்றது. சின்னம் என்பது இரண்டாம் பட்சம் தான். சின்னம் இருந்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற காலம் இதுவல்ல.

மறைமுக ஆதரவாளர்கள் சட்டமன்றத்தில் வாக்கெடுப்பின் போது வெளியே வருவார்கள். எதிரிகளையும், துரோகிகளையும் இந்தத் தேர்தலில் வீழ்த்துவோம். இடைத்தேர்தல் அறிவிக்க வேண்டும் என்பதற்காக சாதிக் அலி வழக்கைக் காட்டி தேர்தல் ஆணையத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இடைத்தேர்தலில் கட்டுப்பணம் பெறமுடியாது எனமைத்ரேயன் தெரிவித்துள்ளார். அவர் சொந்தத் தொகுதியிலேயே ஜெயிக்க முடியாதவர். அவருக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை. மைத்ரேயன் தேர்தல்சாவடியில் அமர்ந்து பணியாற்றிய அனுபவம் இருக்கின்றதா? எனத் தெரியவில்லை.

டிசெம்பர் 24ஆம் திகதி யார் கட்டுப்பணம் இழக்கின்றனர் என்பது தெரியவரும். இந்த ஆட்சியை வீட்டிற்கு அனுப்புவேன். இதுவே இடைத் தேர்தலில் மக்களுக்கு நான் கொடுக்கின்ற முதல் வாக்குறுதி. யாருடனும் கூட்டணி தொடர்பாக இதுவரை பேசவில்லை.



தினகரன் பேட்டி

எனது வீட்டிலும் உறவினர்கள் வீட்டிலும் வருமான வரித்துறை எதனையும் கைப்பற்றவில்லை. சில ஆவணங்களை மட்டுமே எடுத்துச் சென்றுள்ளது.

இரட்டை இலை என்பது வரமல்ல என்பதை எடப்பாடி பழனிச்சாமி, பன்னீர்செல்வம் அணிக்கு விரைவில் புரிய வைப்போம். ஆர்.கே.நகர் அ.தி.மு.கவின் கோட்டை, நிச்சயம் எங்கள் அணி வெற்றி பெறும். ஆர்.கே. நகர் தேர்தலில் போட்டியிட்டு நான் வெற்றி பெறுகின்றமை உறுதி. இதில் தொப்பிச் சின்னத்தில் கேட்பேன். தேர்தல் ஆணையம் எந்தச் சின்னம் வழங்கினாலும் அதைப் பெற்றுக் கொண்டு போட்டியிடுவேன்.

உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போகின்றேன் என சொன்னதற்கே டில்லிக்கு ஓடுகின்றனர். அவர்கள் டில்லிக்கு ஓட வேண்டும் என்பதற்காகவே வழக்கு தொடரப் போகின்றேன் எனச் சொன்னேன். இரட்டை இலையை மீட்க வழக்குத் தொடரப்படும்.


நான் ஜெயித்து விடுவேன் என்று நினைத்துத்தான் சென்ற முறை தேர்தலை நிறுத்தினேன். பணப்பட்டுவாடா என்பது தேர்தல் ஆணையம் முன்னிறுத்திய காரணமே தவிர பணப்பட்டுவாடா உண்மையில்லை.

இரட்டை இலைச் சின்ன தீர்ப்பிற்கு சாதிக் அலி தீர்ப்பை மேற்கோள் காட்டுகின்றமை தவறு. எங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பில் நிறையத் தவறுகள் உள்ளன. இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஏ மற்றும் பி மனுவில் கட்சியின் பொதுச்செயலாளர் கையெழுத்திட வேண்டும். இதுதான் சட்ட விதி. அங்கு கட்சியின் பொதுச்செயலாளரே இல்லை. ஒருங்கிணைப்பாளரும், இணை ஒருங்கிணைப்பாளரும்தான் இருக்கிறார்கள்.

எனவே, எடப்பாடி-ஓ.பி.எஸ். அணியினர் யாரை வைத்து எந்த அடிப்படையில் கையெழுத்திடப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அ.தி.மு.கவை தொடங்கிய எம்.ஜி.ஆர். கொண்டு வந்த சட்டவிதியை மாற்றி விட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

## தீவிரவாதத்தை ஒழிக்க உறுதி பூணுவோம்

### ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்



புதுடில்லி,நவ.27

மும்பை தீவிரவாதத் தாக்குதலின் 9ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி, அனைத்து வகையான தீவிரவாதத்தையும் ஒழிக்க பூணுவோம் என ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட ஆகியவெளிநாட்டவர் உட்பட 166 பேர் உயிரிழந்தனர். காவல்துறை உயரதிகாரிகளும் தீவிரவாதிகளின் இலக்கிற்குப் பலியாகினர். இந்தத் தாக்குதலுக்கு உலகளவில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், மும்பை தீவிரவாதத் தாக்குதல் நினைவு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், மும்பைத் தாக்குதலில் 9ஆவது ஆண்டு நினைவு தினத்தில், பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீவிரவாதத்திற்கு எதிரான போரில் பாதுகாப்பு அதிகாரிகளும் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். இந்த நாளில் அனைத்து வடிவங்களிலும் பயங்கரவாதத்தை ஒழிக்க உறுதியேற்போம். நம்முடைய மக்கள், நாடு, உலகம் பாதுகாப்பாக இருக்க உறுதியேற்போம் என்று பதிவிட்டுள்ளார்.

## இரட்டை இலைச் சின்னம் விவகாரத்தில் தேர்தல் ஆணைய தீர்ப்பு நியாயமானது

இரட்டை இலைச் சின்னம் விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் தீர்ப்பு நியாயமானது என்று பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் துணை முதலமைச்சர் பன்னீர்செல்வம் நிருபர்களிடம் கூறியவை வருமாறு-

இரட்டை இலைச் சின்னம் விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் தீர்ப்பு நியாயமானது. இதனை தமிழக மக்களும் ஏற்றுக் கொண்டு உள்ளனர். வெற்றிச் சின்னமான இரட்டை இலை சின்னத்துடன் எங்களின் வெற்றிப் பயணம் என்றும் தொடரும். ஆர்.கே. நகர் தொகுதியில் அ.திமு.க. மகத்தான வெற்றியைப் பெறும்.



வருகிற உள்ளாட்சித் தேர்தல் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் இரட்டை இலை சின்னத்துடன் அ.தி.மு.க. வெற்றிகளை மட்டுமே பெறும். ஆர்.கே. நகர் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணிஅமைத்துப்போட்டியிடுமா? என்று கேட்கிறீர்கள். இதுபற்றித் தலைமைக் கழக நிர்வாகிகள் கூடி உரிய முடிவு எடுப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## தினகரனுக்கு ‘தொப்பி’ சின்னம் வழங்கக்கூடாது

சென்னை,நவ.27

டி.டி.வி.தினகரனுக்கு மீண்டும் தொப்பிச் சின்னம் வழங்கக்கூடாது என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக பா.ஜ.க. மையக்குழுக் கூட்டம் கமலாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. கூட்டத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், அமைப்பு செயலாளர் கேசவ விநாயகம், தேசிய செயலாளர் எச்.ராஜா, இல.கணேசன் எம்.பி. உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டம் முடிந்த பின்னர் தமிழிசை சவுந்தரராஜன் நிருபர்களிடம் கூறியவை வருமாறு–

தற்போது முதல் கூட்டம் தான் நடைபெற்று முடிந்து இருக்கிறது. இதன் முடிவை நாங்கள் மத்திய தலைமைக்கு அனுப்பி இருக்கிறோம்.



தமிழிசை தெரிவிப்பு

ஆர்.கே.நகர் தேர்தலை எப்படி அணுகுவது?, எதிர்கொள்வது? என்ற முடிவுக்கு நாங்கள் இன்னும் வரவில்லை. அப்படி இருக்கும்போது யார் வேட்பாளர் என்பதை இப்போது சொல்லமுடியாது.

ஆனால், இன்றைய அரசியல் சூழலுக்கு ஏற்ப எங்களுக்கு உடைய முடிவு இருக்கும். தேசியக் கட்சி என்பதால் எங்களுக்கு என்று ஒரு வழிமுறை இருக்கிறது. அவசரம் இல்லாமல் தீர ஆலோசித்து முடிவு எடுப்போம்.

ஆர்.கே.நகர் தொகுதியில் டி.டி.வி. தினகரன் போட்டியிட்டால் அவருக்கு கடந்தமுறை வழங்கப்பட்ட தொப்பிச் சின்னத்தை மீண்டும் வழங்கக் கூடாது. ஏனென்றால் அந்தத் தொப்பிச் சின்னத்தை வைத்துதான் அங்கு ஊழலே ஆரம்பித்தது. மிக அதிகப்படியான பணம் அந்த தொப்பியை பிரபலப்படுத்துவதற்காகத் தான் நடந்தது.

மீண்டும் அவருக்குத் தொப்பிச் சின்னத்தை கொடுக்கும்போது, பழைய முறைகேடுகளின் தொடர்பாகவே தான் இருக்கும். இதைத் தேர்தல் ஆணையம் சிந்திக்க வேண்டும். ஜனநாயக முறைப்படி மக்களுக்கு இருக்கும் ஒரு சந்தேகத்தை நான் வெளிப்படுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

**மக்கள் பிரதிநிதிகள் சத்தியப்பிரமாணத்தில் மாற்றம்:**

# சட்ட அமைச்சர் பதவி விலகக் கோரி பாகிஸ்தானில் தொடர்கின்றது கலவரம்

இஸ்லாமாபாத்,நவ.27

பாகிஸ்தானில் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் சத்தியப் பிரமாணம் செய்யும் போது அதில் மதசம்பந்தமான சில வரிகளை மாற்றிப் பிரமாணம் எடுக்கலாம் எனச் சட்டத்துறை அமைச்சர் ஜஹித் ஹமீது சமீபத்தில் ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வர முயன்றார். இதற்குப் பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் சில இஸ்லாமிய அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தன. மேலும் ஜஹித் ஹமீது மீது ராஜினாமா செய்ய வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

பாகிஸ்தானில் தேர்தலின் போது வேட்பாளர்கள் மத அடிப்படையில் செய்து கொள்ள வேண்டிய திருத்தப் பிரமாணத்தை சட்ட அமைச்சர் ஜாகித் ஹமீது மேற்கொள்ளவில்லை.

இதனால் அவர் பதவி விலக வலியுறுத்தி தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த ஒரு வாரமாக தெக்ரிக், லபாயிக் ரா ரசூல் அல்லா அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இதனால் தலைநகர் இஸ்லாமாபாத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.




எனவே, போராட்டக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் வலியுறுத்தியது. அரசுக்குக் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணை இராணுவமும், அதிரடிப்படைப் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

போராட்டக்காரர்களைக் கலைந்து செல்லும்படி எச்சரித்தனர். அதற்கு அவர்கள் செவி சாய்க்காதமையால் றப்பர் குண்டுகளும், கண்ணீர் புகைக் குண்டுகளும் வீசப்பட்டன. இதனால் போராட்டக்காரர்களின் 50இற்கும் மேற்பட்ட கூடாரங்கள் தீப்பிடித்து எரிந்தன.



அதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பின்னர் அது கலவரமாக மாறியது. இது தலைநகர் இஸ்லாமாபாத்தில் மட்டுமின்றி பாகிஸ்தானின் பிற நகரங்களான கராச்சி, ஐதராபாத், லாகூர், குஜ்ரத், குஷ்ரன் வாலா, பைசலா பாத், பெஷாவர் உள்ளிட்ட இடங்களுக்கும் பரவியது. அங்கு மதவாதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இக்கலவரத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 250இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிலைமை மிக மோசம் அடைந்ததைத் தொடர்ந்து பாதுகாப்புப் பணிகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இஸ்லாமாபாத் உள்ளிட்ட பல நகரங்களில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

---

*ஹபீஸ் சயீத் விடுதலை:*

## பாகிஸ்தானை எச்சரிக்கிறது அமெ.வெள்ளை மாளிகை



வொஷிங்டன்,நவ.27

மும்பைத் தாக்குதல் தீவிரவாதி ஹபீஸ் சயீத்தை பாகிஸ்தான் மீண்டும் கைது செய்து சிறையில் அடைக்காமல் விட்டால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு பாதிக்கப்படும் என வெள்ளை மாளிகை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மும்பைத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட ஹபீஸ் சயீத்தை பாகிஸ்தான் அரசு கடந்த ஜனவரி மாதம் கைது செய்து வீட்டுக்காவலில் வைத்தது. பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில், அவருக்கு எதிராகப் போதுமான ஆதாரங்கள் இல்லை எனக்கூறிய பஞ்சாப் மாகாண நீதிமன்றம் சயீத்தை விடுதலை செய்ய உத்தரவிட்டது.

இந்த நிலையில், இவ்விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அலுவலகமான வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளவையாவன–

சயீத் விடுவிக்கப்பட்டமை அவர் மீதான குற்றத்தைப் போதிய ஆதாரங்களுடன் பாகிஸ்தான் அரசு நிரூபிக்கத் தவறியமையை காட்டுகிறது. ஆனால், தீவிரவாதத்திற்கு எதிராகப் பாகிஸ்தான் போராடுகின்றது என வாதாடுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஹபீஸ் சயீத்தை மீண்டும் கைது செய்து உறுதியான வகையில் சிறைத் தண்டனை அளிக்கப்படாமல் இருந்தால் அது இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் தாக்கத்தை ஏற்படுத்தும். சர்வதேச அளவில் பாகிஸ்தானுக்கு இருக்கும் செல்வாக்கு மீதும் இந்தத் தாக்கம் எதிரொலிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 1,200 ரோஹிங்கியா அகதிகள் மிஜோரம் மாநிலத்தில் தஞ்சம்

மியன்மார் எல்லையில் இருந்து வெளியேறிய ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள் இந்தியாவின் மிஸோரம் மாநிலத்தில் நேற்று முன்தினம் தஞ்சம் அடைந் துள்ளனர்.

மியன்மார் நாட்டில் ரோஹிங்கியா இனத்தைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராக வசித்து வருகின்றனர். இவர்களைக் குறி வைத்துத் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது.

இதையடுத்து, அங்கிருந்து ரோஹிங்கியாக்கள் வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். பங்களாதேஷில் மட்டும் சுமார் 6 லட்சத்துக்கு மேற்பட்ட அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், மியன்மார் நாட்டில் இருந்து ஆயிரத்து



200இற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள் வெளியேறி மிஸோரம் மாநிலத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிஸோரத்தில் தஞ்சம் புகுந்தவர்களில் புத்த மதம் மற்றும் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர்களே அதிகம். தஞ்சமடைந்த அகதிகள் பள்ளிகள் உட் படப் பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

---

## சூரியனில் மிகப்பெரிய ஓட்டை: நாசா கண்டுபிடிப்பு

சூரியனில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய ஓட்டையிலிருந்து வெளியேறும் சூரியக் காற்று பூமிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா தெரிவித்துள்ளது.

சூரியனின் மேற்பரப்பில் மிகப்பெரிய ஓட்டை விழுந்திருப்பதையும், அதன் வழியாக அதிவேகத்தில் வெளியேறும் சூரியக் காற்று, பூமியை சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைகோள்கள் மற்றும் சூரிய மின்சக்திக் கருவிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது என நாசா தெரிவித்துள்ளது.

நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வு மையம், சூரியனின் மேற்பரப்பைக் கடந்த 8ஆம் திகதி படம் பிடித்து ஆய்வு மேற்கொண்டது.

அந்த புறஊதாப் படத்தில், சூரியனின் மேற்பரப்பில் கறுப்பாக மிகப்பெரிய ஓட்டை ஏற்பட்டமை தெரிய வந்துள்ளது. அதன் வழியாக சூரிய வெப்பக் காற்று அதிவேகமாக வெளியேறி வருகின்றது.

சூரியனின் மேற் பரப்பில் இருந்து வெப்பக் காற்று வெளியேறுவது அடிக்கடி நிகழும் சாதாரண நிகழ்வு தான் என்றாலும், இந்த ஓட்டை வழியாக அதிவேகத்தில் சூரியக்காற்று வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மெஸ்ஸி 2021 வரையிலும் பார்சிலோனா அணியிலேயே!




உதைபந்து ஜாம்பவான் லயோனல் மெஸ்சி பார்சிலோனாவுடனான ஒப்பந்தத்தை 2021 வரை நீட்டித்துள்ளார்.

அர்ஜென்டினா உதைபந்து அணியின் தலைவராகத் திகழும் லயோனல் மெஸ்ஸி, இந்த தலைமுறையின் சிறந்த உதைபந்து வீரர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் ஸ்பெயின் நாட்டின் தலைசிறந்த உதைபந்து அணியான ஆன பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகின்றார். தனது ஆரம்ப காலத்தில் இருந்தே இந்த அணிக்காகத்தான் விளையாடி வருகிறார்.

தொடர்ந்து அணியில் இடம்பிடித்து வந்தாலும் அவரது ஒப்பந்தம் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வரையறுக்கப்படும். அதன்படி, அடுத்த ஆண்டு பருவகாலத்தோடு மெஸ்ஸியின் ஒப்பந்தம் முடிவுக்கு வர இருந்தது. இதனால் கடந்த ஜூலை மாதம் ஒப்பந்தத்தை நீடிக்க வேண்டும். இதனால் ஒப்பந்தத்திற்கு வாருங்கள் என மெஸ்ஸியை அழைத்தது பார்சிலோனா. ஆனால், மெஸ்சி தனது ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் இருந்தார்.

இதனால் பார்சிலோனா உடனான ஒப்பந்தத்தை நீட்டிப்பாரா? அல்லது அணி மாறுவாரா? என்ற கேள்வி எழுந்து வந்தது. ஒருவேளை மெஸ்ஸி கையெழுத்திடாமல் இருந்தால் வெளியேறும் நிலை ஏற்படும்.

சமீபத்தில் நெய்மர் பார்சிலோனா அணியில் இருந்து வெளியேறினார். இதனால் மெஸ்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை பர்சிலோனா அணிக்கு ஏற்பட்டது. இந்த நிலையில், நேற்று மெஸ்சி தனது ஒப்பந்தத்தை 2021 வரை நீட்டிக்க ஒப்புக் கொண்டார். அதற்கான ஒப்பந்தத்திலும் அவர் கையெழுத்திட்டார்.

இதன்மூலம் 2020- 2021 வரை மெஸ்சி பார்சிலோனா அணிக்காக விளையாடுவார். 13 வயதில் பார்சிலோனா அணிக்கு வந்த மெஸ்சி, 602 போட்டிகளில் விளையாடி 523 கோல்கள் அடித்துள்ளார்.




# அஸ்வின் - ஜடேஜா ஜோடி 28 டெஸ்டில் 304 இலக்குகள்

இந்தியாவின் முன்னணி சுழற்பந்து வீச்சு ஜோடியான அஸ்வின் - ஜடேஜா 28 டெஸ்ட் போட்டிகளில் 304 விக்கெட்டுக்கள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளனர்.

இந்திய டெஸ்ட் அணியின் முன்னணி சுழற்பந்து வீரர்கள் அஸ்வின், ஜடேஜா. இந்த இருவரது சிறப்பான பந்து வீச்சால்தான் இந்தியா டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக வெற்றிகளைப் பெற்று வருகிறது. 2015ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து இந்திய அணி டெஸ்ட் தொடரை இழக்காமல் 8 தொடரைக் கைப்பற்றியது. இதற்கு இந்த இருவரது பங்களிப்பும் முக்கியமானது.

நாக்பூரில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய 2ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் இந்த இருவரும் சேர்ந்து 7 விக்கெட் வீழ்த்தினார்கள். அஸ்வின் 67 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டும், ஜடேஜா 56 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டும் கைப்பற்றினார்கள். இதன்மூலம் அஸ்வின் - ஜடேஜா கூட்டணி இணைந்து டெஸ்டில் 300ஆவது விக்கெட்டுக்கள் மேல் வீழ்த்திச் சாதனை படைத்தது. இருவரும் இணைந்து 28 டெஸ்டில் 304 விக்கெட் வீழ்த்தி உள்ளனர். இதில் அஸ்வின் 163 விக்கெட்டும், ஜடேஜா 141 விக்கெட்டும் எடுத்துள்ளனர்.

# இலங்கை வீரர் சானகவுக்கு அபராதம்




இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில், பந்தை சேதப்படுத்தியதால் இலங்கை வீரர் தசன் சானகவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு எதிராக நாக்பூரில் நடந்து வரும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் தசன் சானக பந்தைச் சேதப்படுத்திச் சிக்கியுள்ளார்.

நேற்று முன்தினம் 2ஆவது ஆட்டத்தின் போது 50ஆவது ஓவரில் சானக பந்தை கை விரல்களால் சேதப்படுத்தியமை கேமராவில் பதிவானது. அவர் பந்தின் தன்மையை மாற்ற முயற்சி செய்தார்.

இதுபற்றி களநடுவர் ஜோயல் வில்சன் ரிச்சர்ட் கேட்லேபுரப் மற்றும் 3ஆவது நடுவர் நிக்கல் லாங் ஆகியோர் மேட்ச் ரெப்ரி டேவிட் பூனிடம் முறைப்பாடு செய்தனர்.

இது தொடர்பாக சானகவிடம் விசாரணை நடத்தப்பட்டது. அப்போது அவர் பந்தை சேதப்படுத்தியதை ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவருக்குப் போட்டி கட்டணத்தில் 75 வீதம் அபராதமாக ஐ.சி.சி. விதித்துள்ளது.

இதுபற்றி மேட்ச் ரெப்ரி டேவின் பூன் கூறுகையில், சானக தனது கிரிக்கெட் வாழ்க்கையில் தொடக்கத்தில் இருக்கிறார். இந்த தண்டனை (அபராதம்) அவர் வருங்காலத்தில் இதுபோன்று செயற்படாமல் இருக்க உதவும் என நம்புகிறேன் என்றார்.

# ரோஜர் பெடரருக்கு கலாநிதிப் பட்டம்

சுவிற்ஸர்லாந்தின் தலைசிறந்த டென்னிஸ் வீரராக ரோஜர் பெடரருக்கு அந்நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்று கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர் உலகின் தலைசிறந்த வீரராகத் திகழ்ந்து வருகிறார். டென்னிஸ் போட்டியின் உயரிய விருதாக கருதப்படும் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை 19 முறை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்தின் தலைசிறந்த பல்கலைக்கழகமாகப் பஸல் விளங்குகிறது. இந்தப் பல்கலைக்கழகம் பெடரருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இந்தப்பட்டம் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றபோது கிடைத்தது மகிழ்ச்சி என பெடரர் தெரிவித்துள்ளார்.



# ஹொங்கொங் ஓபன்: இறுதிச் சுற்றில் பி.வி. சிந்து



ஹொங்கொங் ஓபன் சூப்பர் தொடர் பெட்மிண்டன் தொடரில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஹொங்கொங் ஓபன் சூப்பர் சீரிஸ் பெட்மிண்டன் தொடரில் பெண்களுக்கான அரையிறுதிப் போட்டி ஒன்றில் இந்தியாவின் பி.வி. சிந்து தாய்லாந்தின் ரட்சனோக் இன்டனோனை எதிர்கொண்டார்.

இதில் பி.வி. சிந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் 21:17, 21:17 என நேர்செட் கணக்கில் ரட்சனோக் இன்டனோனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். தாய்லாந்து வீராங்கனை ரட்சனோக் இன்டனோன் உடன் பி.வி. சிந்து 6 முறை மோதி, இரண்டு வெற்றிகளைப் பெற்றுள்ளார். நான்குபோட்டிகளில் தோல்வியடைந்துள்ளார்.

இறுதிப் போட்டியில் உலகத் தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருக்கும் சிந்து முதல் இடத்தில் இருக்கும் சீனாவின் தாய்சூ யிங்கை எதிர்கொள்கிறார். கடந்த முறை இறுதிப் போட்டியிலும் இருவர்தான் பலப்பரீட்சை நடத்தினார்கள். அதில் சீன வீராங்கனை வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# நாக்பூர் டெஸ்ட்: கோஹ்லி இரட்டைச் சதம்; வலுவான நிலையில் இந்தியா

இலங்கைக்கு எதிரான நாக்பூர் 2ஆவது டெஸ்டில் விராட் கோஹ்லியின் இரட்டைச் சதத்தால் இந்தியா முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 610 ஓட்டங்களை எட்டியது.

இந்தியா - இலங்கை இடையிலான 2ஆவது டெஸ்ட் நாக்பூரில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்த இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 205 ஓட்டங்களில் சுருண்டது. அஸ்வின் 4 விக்கெட்டும், ஜடேஜா மற்றும் இசாந்த் சர்மா தலா 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் இந்தியா முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் 7 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். ஆனால், மற்றொரு தொடக்க வீரர் முரளி விஜய் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 128 ஓட்டங்கள் குவித்தார். அடுத்து வந்த புஜாரா சதமும், விராட் கோஹ்லி அரைசதமும் அடிக்க நேற்றுமுன் தினம் 2ஆவது நாள் ஆட்ட முடிவில் இந்தியா 2 விக்கெட் இழப்பிற்கு 312 ஓட்டங்கள் குவித்தது. புஜாரா 121 ஓட்டங்களுடனும், விராட் கோஹ்லி 54 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய கோஹ்லி சதம் அடித்தார். மறுமுனையில் விளையாடிய புஜாரா 143 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ரகானே 2 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தார்.

5ஆவது விக்கெட்டுக்கு விராட் கோஹ்லியுடன் ரோகித் சர்மா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியும் அபாரமாக விளையாடியது. அரைச் சதம் அடித்த ரோகித் சர்மா சதத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அதேவேளையில் விராட் கோஹ்லி சிறப்பாக விளையாடி இரட்டைச் சதம் அடித்தார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் விராட் கோஹ்லியின் 5ஆவது இரட்டைச் சதம் இதுவாகும். விராட் கோஹ்லி 259 பந்தில் 15 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் இரட்டைச் சதம் அடித்தார்.

தொடர்ந்து விளையாடிய விராட் கோஹ்லி 213 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அப்போது இந்தியா 5 விக்கெட் இழப்பிற்கு 583 ஓட்டங்கள் குவித்திருந்தது. தொடர்ந்து களம் இறங்கிய அஸ்வின் டில்ருவான் பெரேராவின் பந்து வீச்சில் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரோகித் சர்மா 102 ஓட்டங்களுடனும் சகா ஒரு ஓட்டத்துடனும் களத்தில் இருக்க தனது இன்னிங்ஸை நிறுத்திக் கொண்டது.

தொடர்ந்தும் தனது இரண்டாவது இனனிங்ஸுக்காகக் களம் இறங்கிய இலங்கை அணி 21 ஓட்டங்களுக்குள் ஒரு விக்கெட்டை இழந்து தடுமாறி வருகின்றது. போட்டியின் நான்காம் நாள் இன்று.



# ஆஷஸ் முதல் டெஸ்ட்: வெற்றியின் விளிம்பில் ஆஸி.



இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிக்கு இடையேயான ஆஷஸ் தொடரின் முதல் போட்டியில் 69 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆஸ்திரேலியா அணி விக்கெட் இழப்பின்றி விளையாடி வருகின்றது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து 302 ஓட்டங்களுடன் எல்லா விக்கெட்டுகளையும் இழந்தது.

பின்னர் விளையாடிய ஆஸ்திரேலியா 328 ஓட்டங்கள் குவித்தது. இதற்கு முக்கிய காரணம் அந்த அணியின் தலைவர் ஸ்மித்தான். அவர் நிலைத்து நின்று விளையாடி 141 ஓட்டங்கள் குவித்தார். ஒருபக்கம் விக்கெட்டுக்கள் இழந்த நிலையில் மறுமுனையில் நிலைத்து நின்று விளையாடினார். இதனால் 261 பந்துகளைச் சந்தித்து சதம் அடித்தார்.

328 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அந்த அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஆட்டமிழந்தது. இதனையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆஸி. பந்து வீச்சாளர்கள் அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் இங்கிலாந்து அணி விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இங்கிலாந்தின் ரூட், மொயீன் அலி மற்றும் ஜான்னி பேயர்ஸ்டோ மட்டுமே நிலைத்து நின்று விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இறுதியில் 71 ஓவர்கள் முடிவில் 195 ஓட்டங்களை எடுத்த இங்கிலாந்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. ஸ்டோர்க், ஹஸில் வுட் மற்றும் நேதன் லயன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்து பந்து வீச்சை எளிதாக சமாளித்து விளையாடி வருகிறது. டேவிட் வோர்னர் மற்றும் கமரூன் தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கி நிதானமாக ஆடி வருகின்றனர்.

29 ஓவர்களில் 101 ஓட்டங்களை எடுத்துள்ள ஆஸ்திரேலியா இன்னும் 69 ஓட்டங்கள் எடுக்க வேண்டும். இன்று ஐந்தாம் நாள் ஆட்டம் மீதம் இருப்பதால் ஆஸ்திரேலிய அணியின் வெற்றி



# 2ஆவது இடத்தில் புஜாரா

இந்திய அணியின் டெஸ்ட் வீரரான புஜாரா நாக்பூர் டெஸ்டில் 143 ஓட்டங்கள் குவித்து, இந்த ஆண்டில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பாட்டம் செய்த இலங்கை 205 ஓட்டங்களுடன் சுருண்டது. பின்னர் இந்தியா முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது.

தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் 7 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்த நிலையில் அடுத்த வீரராக புஜாரா களம் இறங்கினார். தனது அபாரமான ஆட்டத்தால் புஜாரா 143 ஓட்டங்கள் குவித்தார்.

அவர் 75ஆவது ஓட்டங்கள் எடுத்தபோது இந்த ஆண்டில் ஆயிரம் ஓட்டங்கள் தொட்டார். இதன் மூலம் 2017இல் டெஸ்டில் ஆயிரம் ஓட்டங்கள் தொட்ட 3ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 143 ஓட்டங்கள் அடித்ததன் மூலம் புஜாரா 10 போட்டியில் 16 இன்னிங்ஸில் 4 சதம், 5 அரைசதம் மூலம் ஆயிரத்து 68 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இதன்மூலம் இந்த ஆண்டில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் 2ஆவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்க தொடக்க வீரர் டீன் எல்கர் 1097 ஓட்டங்கள் எடுத்து முதல் இடத்திலும், இலங்கை வீரர் கருணரத்ன ஆயிரம் ஓட்டங்கள் எடுத்து 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

## பேரெழுச்சியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் நாளை எழுச்சியுடன்அனுஷ்டிப்பதற்காக மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும்புனரமைக்கப்பட்டுஅஞ்சலி நிகழ்வுகளுக்குத் தயார்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக யுத்தம் முடிவடைந்த பின்னர் முதல் தடவையாக வடக்கில் 13 மாவீரர் துயிலும் இல்லங்களிலும் இன்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

போர்நிறைவடைந்தபின்னர் மாவீரர் துயிலும் இல்லங்கள் பலவற்றைஇராணுவத்தினர்தம் வசப்படுத்தி அவற்றில் முகாம்களைஅமைத்தனர். மேலும்சில துயிலும் இல்லங்கள் காடுகளாலும் பற்றைகளாலும் சூழ்ந்து கிடந்தன. அவை புனரமைக்கப்பட்டுள்ளன. அவற்றைச்சூழச் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுநடுவில்கொடிக்கம்பம்நடப்பட்டு இன்றுஅஞ்சலிநிகழ்வுகள் நடக்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உடுத்துறை, தீருவில், சாட்டி, கிளிநொச்சியில் கனகபுரம், முழங்காவில், முல்லைத்தீவில் தேராவில்,முள்ளியவளை,இரணைப்பாலை, அளம்பில், வன்னிவிளாங்குளம், கூழாமுறிப்பு, மன்னாரில் ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான், வவுனியாவில் ஈச்சங்குளம் ஆகிய துயிலும் இல்லங்களில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இவற்றைவிட யாழ்.பல்கலைகழகத்திலும் இன்று மாவீரர் தின நிகழ்வுகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

உடுத்துறையில்இடம்பெறும் மாவீரர்தினநிகழ்வில்முதலாவது சுடரை நான்கு போராளிகளைப் பெற்றெடுத்த கந்தசாமி ஈஸ்வரியம்மாள் ஏற்றவுள்ளார். அதே போன்று இன்று காலை 10 மணிக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையிலான அணியினர் நல்லூரில் உள்ள திலீபனின் நினைவிடத்தில்சுடரேற்றுவதுடன் இராணுவத்தின் கட்டுப்பாடுகளிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களானகோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் சுடரேற்றுவர்.

இன்று மாலை 7 மணிக்கு தொண்டமானாறுக் கடலில் மாவீரர் தின நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளில் சரியாக மாலை6.02மணிக்குமணிஒலி எழுப்பப்பட்டு மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றல் இடம்பெறும். இதன்போது மாவீரர் நாள் பாடல்களும் ஒலிக்கவிடப்படவுள்ளதாகமாவீரர்தின ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை புலம்பெயர் தேசங்களிலும் இன்று மாவீரர் தின நிகழ்வுகளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுக் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணிக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெற்றது.

தமிழீழத்தைச் சித்திரிக்கும் வகையில் கேக் அமைந்திருந்தது சிறப்பு அம்சம்.

அத்துடன் தலைவர் வே.பிரபாகரனுக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கும் சுவரொட்டிகளும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதிகலையரங்குஉட்பட வளாகம் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன.

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் நேற்று வடக்கு – கிழக்கிலும் பரவலாக வெடி கொளுத்திகேக்வெட்டிதலைவர் பிரபாகரனின் பிறந்த தினம் மகிழ்சியுடன் கொண்டாப்பட்டது.

பிரபாரகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் அவரது வீடு இருந்த இடத்தில் நேற்று அதிகாலை தமிழ்த் தேசியப்பண்பாட்டுபேரவையின் ஏற்பாட்டில் கேக் வெட்டி பிறந்த நாள்கொண்டாப்பட்டது.அதனை தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரபாகரனின் வீட்டு வளவில் கேக் வெட்டி பிறந்த நாளைக் கொண்டினார்.

இதன்போது வெடிகள் கொளுத்தப்பட்டதுடன்அங்கிருந்தவர்களுக்கு கேக் மற்றும் இனிப்புகள் பரிமாறப்பட்டன. பிரகாரனதுவீடுஇருந்தஇடத்தில் மரக்கன்றுகளும்நாட்டப்பட்டன. இதில்பெரும்எண்ணிக்கையான மக்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வின் நிறைவில் செய்தியாளர்களிடம் பேசிய சிவாஜிலிங்கம்.

நாம் கொண்டாடும் பிறந்த நாள்கொண்டாட்டங்கள்சிங்கள தேசத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தும் எனத் தெரிந்து கொண்டுதான் அவற்றை நாம் கொண்டாடுகின்றோம்.

சர்வதேச நாடுகள் மாத்திரமல்லசிங்களத்தலைமைகள் கூட தமிழீழத் தேசியத் தலைவரின் ஆளுமைகளைப் போற்றுகின்றன. தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்பதை ஐ.நா. வரை கொண்டு சென்றவர்.

சிங்களமக்கள்ஜே.வி.பி.யின் தலைவர் கொல்லப்பட்ட தினத்தை தேசிய வீரர்கள் தினம் எனக் கடைப்பிடிக்க முடியும் என்றால் , தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைபுலிகளின்தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவோம்.

அதேபோல தமிழ் மக்களின் விடுதலைக்காக இன்னுயிரை நீத்தபோராளிகள்,மாமனிதர்கள் நாட்டுப் பற்றாளர்கள் என இந்த மண்ணின் விடுதலைக்காக மடிந்தவர்களை நாம் நினைவு கூருவோம்.

தமிழர்களின் தாகம் தமிழ் தமிழீழதாயகம்எனமடிந்தவர்கள் அவர்கள்.தமிழ்மக்கள்தங்களை தாங்களே ஆளக் கூடிய தமிழ் தேசியம்சுயநிர்ணயத்தைவென்றெடுப்போம் என உறுதி கூறுகின்றோம் – என்றார்.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட26பேரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

புத்தளம் பகுதியில் உள்ள இடமொன்றில் இவர்கள்தங்க வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில்கிடைக்கப்பெற்றதகவலுக்கு அமைய, இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு 26 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட ஆண்கள் தவிர்ந்து பெண்களும் இவ்வாறு செல்ல முற்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளது எங்கே? என்பன தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இலங்கைப் போக்கு வரத்துச் சபையின்வடபிராந்தியமுகாமையாளர் உடனடியாக இடமாற்றக் கோரி வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் தொழிற்சங்கம் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

தமது கோரிக்கைக்குத் தீர்வு கிடைக்கும்வரை இந்தப்பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இடம் பெறும் என தொழிற்சங்கத் தின் தலைவர் மற்றும் செயலாளர் கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை டிசெம்பர் 13ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்தக் காலப்பகுதியில் ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சை இடம் பெறவுள்ளது. மாணவர்களின் நலன் கருதியே நாளை முதல் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## துயிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டதால் அங்கு பதற்றநிலை தோன்றியது.

சிவில் உடையில் அங்கு குவிக்கப்பட்ட இராணுவத்தினர் அங்கு தாமும் துப்புரவுப் பணியில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தனர். பவல் உள்ளிட்ட இராணுவ வாகனங்களிலேயே இராணுவத்தினர் அங்கு அழைத்துவரப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரிய மாவீரர் இல்லமான கோப்பாய் துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அங்கு விதைக்கப்பட்டுள்ள மறவர்களுக்கு அஞ்சலி செலுத்த உறவுகளுக்கு அனுமதி இல்லை என்பதால் துயிலும் இல்லத்தின் வெளிப்புறத்தில் அஞ்சலி செலுத்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே நேற்று அந்தப் பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டது.

## பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் நேற்று பிரபாகரனின்பிறந்தநாளைகேக்வெட்டி கொண்டாடினார்கள்.தமதுவிடுதியில் நடந்த இந்த நிகழ்வை அவர்கள் முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்தனர்.

இதனை அவதானித்த சிங்கள மாணவர்கள் பிறந்தநாள் கொண்டாடிய மாணவர்களுடன் முரண்பட்டுள்ளனர்.

எனினும் விடுதி மேற்பார்வையாளர் இரு பிரிவினரையும் சமரசம் செய்து அனுப்பி வைத்தார் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, வவுனியா வளாகத்தின் குருமன்காடு கற்கைகள் பீடத்திலும் பிறந்த நாள்கொண்டாட்டத்தால்சிங்கள மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்நிலையில் பூங்கா வீதியில்அமைந்துள்ளவளாகத்தின் நிர்வாகஅலுவலகத்துக்குநேற்று இரவு 9 மணியளவில் சென்ற சிங்கள மாணவர்கள், கேக் வெட்டிய மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு முதல்வரிடம் கோரிக்கை விடுத்தனர்.

(இதனால் நேற்றிரவு அங்கு பதற்ற நிலை நிலவியது.

## இணைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம் தலைவர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்."

–இவ்வாறு பகிரங்க அழைப்பு விடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

நேற்று மாலை சம்மாந்துறையில் நடைபெற்ற – மர்ஹூம் எம்.ஏ.அப்துல் மஜீட்டின் – ஆறாவது ஆண்டு நினைவு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயேஅவர்இவ்வாறுஅழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பு விடுப்பதற்கான அரங்காக அதனைப் பயன்படுத்துகின்றேன் என்று அவர் குறிப்பிட்ட சமயம் அதாவுல்லா உட்பட பல முஸ்லிம் தலைவர்கள் அரங்கில் இருந்தனர்.

அங்குஇரா.சம்பந்தன்மேலும் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு :–

இங்கு முப்பது வருடங்களாக யுத்தம்நடைபெற்றிருக்கின்றது. இந்தக் காலக் கட்டத்தில் பல் வேறுஆட்சிகளைநாம்கண்டுள்ளோம். இப்போது முதன்முறையாக பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து ஒருமித்து ஆட்சி நடத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்சி மூலம் ஒரு சமரசத் தீர்வை எட்டுவதற்காக சிறுபான்மை மக்களும் கட்சிகளும் கூட அரசுக்கு ஆதரவு வழங்கி நிற்கின்றன.

புதிய அரசமைப்பின் மூலம் அதிகாரத்தைப்பரவலாக்கி, சிறுபான்மையினருக்கு உரிமைகளைவழங்குவதன்மூலம்சமாதானம், சமத்துவம், சமரசம் ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

அத்தகைய முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து கொண்டு நாம் ஆதரவளித்து வருகின்றோம்.

ஒரு காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் பல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழரசுக்கட்சி ஊடாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அப்போது அதிகாரப் பகிர்வு ஏற்படும், எமது பிரச்சினைகள் நிரந்தரமாகத் தீர்க்கப்படும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக அது நடைபெறவில்லை. அத்தகைய தீர்வு ஒன்றைப் பெறுவதற்கு நாம் இன்றும் முயற்சித்துக்கொண்டிருக்கின்றோம்.

நான் இந்த மேடையை ஓர் அரசியல் மேடையாக மாற்ற விரும்பவில்லை.ஆனால்இங்கு பேசிய நண்பர்கள் பலரும் தமிழர் – முஸ்லிம் உறவு பற்றியும்,சரித்திரபூர்வபிணைப்பியல்வுகள் பற்றியும் கருத்து வெளியிட்டனர். இந்தப் பின்புலத்தில் தமிழ் – முஸ்லிம் மக்களினதும் தலைவர்களினதும் சிந்தனைக்கு சிலவிடயங்களைமுன்வைப்பதுபொருத்தமானது என நான் நினைக்கிறேன்.

வடக்கிலும், கிழக்கிலும்தான் தமிழ்ப்பேசும்மக்கள்–தமிழரும் முஸ்லிம்களும் – கூடுதலாக வாழ்கின்றார்கள்.

எமது பிரச்சினைகள் நிரந்தரமாகத் தீர்க்கப்படவேண்டும். எமது நியாயமான உரிமைகள் எமக்கு நிரந்தரமாகக் கிட்ட வேண்டும். தத்தமது பிர தேசங்களில் தமது தலை விதியைத் தாங்களே நிர் ணயித்து செயற்படுத்தக் கூடிதான ஒழுங்கு முறை எமக்கு இருக்க வேண்டும். இது எமது அடிப்படை மனித உரிமை. அதை எவரும் மறுக்க முடியாது.

எமக்குள் இருக்கக் கூடிய கருத்து வேறுபாடு களைத் நாங்களே தீர்த் துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் எவரும்எவரையும்ஏமாற்றமுடியாது.

முஸ்லிம் மக்களைத் தமிழ் மக்களோ, தமிழ் மக் களை முஸ்லிம் மக்களோ ஏமாற்ற முடியாது. தமிழ் மக்களையும் முஸ்லிம், சிங்கள மக்கள் ஏமாற்றமுடியாது.அதேபோன்று தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும்சேர்ந்துசிங்களவர்களை ஏமாற்ற முடியாது.

நாம் அனைவரும் சமத் துவமாக வாழக் கூடியதாக, எமது பிரச்சினைகளை அணுகக் கூடிய முறையில், ஓர் இணக்கத்தை ஏற்படுத் திக் கொள்ள வேண்டும், தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அதிகார அலகு எதுவாக இருந்தாலும்சரி, அதுதமிழ்மக்களுக்கும் முஸ் லிம் மக்க ளுக்கும் திருப்தி அளிப்பதாக இருக்க வேண்டும். அதன் மூலம் தமிழ் மக்களும்திருப்தியடையவேண்டும், முஸ்லிம்மக்களும்திருப்தியடைய வேண்டும். எம்முடன் வாழும்சிங்களமக்களும்எவ்விதமாகவும் பாக்கப்படவும் கூடாது.

அப்படியான ஓர் ஏற் பாடு மூலம் நாங்கள் சமத்துவத்தின் அடிப்படையில் – நீதி, நேர்மையின் அடிப் படையில் – ஒரு நிரந்தர மான சமாதா னத்தை ஏற்படுத்தலாம்.

வடக்கும், கிழக்கும் தமிழ்ப் பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் – அது அங்கீகரிக்கப்பட வேண்டும். அது ஏற்றுக் கொள் ளப்பட வேண்டும் என்பதைத் தமிழ்ப் பேசும் மக்கள் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டனர்.

1987 இல் கைச்சத்தான இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் சில அர்த்த புஷ்டியான உண்மைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நாட்டில் வெவ்வேறு விதமான இனத்துவ மக்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொரு தரப்பினருக்கும் தனித்துவங்கள்உண்டுஎன்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கும், கிழக்கும் தமிழர்களின்தனித்துவமானதாயகங்கள். விசேடஏற்பாட்டின்கீழ்சர்வ ஜன வாக்கொடுப்பு மூலம் உறுதிப்படுத்தப்படும்வரைவடக்கும், கிழக்கும் இணைந்திருக்க வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கபடத்தமான ஓர் உச்ச நீதிமன்றத்தீர்ப்பின் மூலம் வடக்கு –கிழக்கு துண்டிக்கப்படும்வரை அது18வருடங்கள்இணைந்தே இருந்தன.

இந்த முக்கியமான விடயம் குறித்து நாங்கள் தமிழர்கள் – முஸ்லிம்கள் ஆகிய இரு பகுதியினரும் பேச வேண்டும். இரு தரப்புகளின் தலைவர்களும் பேசி இணக்கம் காணவேண் டும்.

அதிகாரப் பகிர்வு மூலம் கிடைக்கின்ற தீர்வை நாங்கள் முழு அளவில் பயன்படுத்துவதாயின் தமிழ் – முஸ்லிம் மக்கள் மத்தியில் இத்தகைய பிரச்சினைகள் இருக்கக்கூடாது. அவை களையப்படவேண்டும். அதைத் தீர்த்துக் கொள்வது நமது கடமை.

இலங்கை–இந்தியஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் அமரர் அஷ்ரப் ஒரு கருத்தைத் தெளிவாகக் கூறினர்.

"இணைந்தவடக்கு–கிழக்கை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் நிபந்தனையற்ற இணைந்த வடக்கு – கிழக்கை நாம் எதிர்க்கின்றோம்." என்றார் அவர்.

"தமிழ்ப் பேசும் மக்கள் வாழுகின்ற பிரதேசம் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு இணைந்திருக்க வேண்டுமானால், அதற்கு நிபந்தனைகள் இருக்கவேண்டும்,முஸ்லிம்மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். முஸ்லிமகள் சமத்துவமாக வாழக்கூடிய ஒரு நிலைமை இருக்க வேண்டும். அப்போதுான் சமாதானம் நிலைத்திருக்க முடியும்" – என்றார் அவர்.

இவை குறித்து நீண்டபேச்சுக்

பக்கம் 03 »

# ஆசிரிய உதவியாளர் போராட்டம் நியாயமானதே கூடிய விரைவில் அவர்களுக்கு தீர்வு கிடைக்கும்!

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 27

ஆசிரியர் உதவியாளர்களின் போராட்டம் நியாயமானது. கூடிய விரைவில் இவர்களுக்கான தீர்வு கிடைக்கும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அண்மையிலும் தற்போதும் தொடர்ந்தும் ஆசிரியர் உதவியாளர்கள் தமது நியமனத்தை ஆசிரியர் தரத்திற்கு உயர்த்தி நிரந்தரமாக்குமாறும் கொடுப்பனவை அதிகரித்துத் தருமாறும் கோரி மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை பயிலும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் கொட்டகலை ஆசி ரியர் பயிற்சி கலாசாலையிலும் போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையியேலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தபட்டு வரும் கல்விமானி பட்டபடிப்புக்கானகிளை ஒன்று கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நிறுவப்பட்டுள்ளது.

இதனை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும்நிகழ்வுகொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடநெறி விரிவுரையாளர்கள் பாடநெறி ஆசிரிய பயிலுநர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்விற்கு பிரதம அதியாகக் கலந்துக் கொண்டு அங்கு உரையாற்றும்போதே கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆசிரியர் உதவியாளர்களின்போராட்டம்நியாயமானது. தற்போது கிடைக்கும் வருமானத் துடன் ஒப்பிடுகையில் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல முடியாது.

வர்த்தமானி அறிவித்தலின் படியே ஆசிரியர் உதவியாளர் கள் தெரிவு செய்யபட்டார்கள். இவர்களின் கொடுப்பனவு 4 ஆயிரம் ரூபாவில் இருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக் கபட்டுள்ளது.

தற்போது இவர்கள் ஆசிரியர் பயிற்சி காலாசாலையில்பயிற்சிபெற்று வருகின்றார்கள். இன்னும் 06 மாதத்தில் பயிற்சி முடிவடைந்து விடும். அதற்கு பிறகு இவர்களுக்கு 37 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கும்.





அதுவரைக்கும்பொறுத்திருக்க வேண்டும். ஆசிரியர்தொழில் செய்வதற்கு கட்டாயம் அந்த தொழில் தொடர்பில் பயிற்சி அவசியம் முழுமையான பயிற்சிகள் முடிவுறும் போதே இவர்கள் ஒரு முழுமையான ஆசிரியர் களாகின்றனர்.

அண்மையில், இவர்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கேட்டு ஆர்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். இதற்கான தீர்வை உடனடியாகப் பெற்றுக் கொள்ளமுடியாது. சற்று பொறுத்திருந்துதான் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கொடுப்பனவு உட்பட இவர்களின் ஆசிரியர் தரத்தை மாற்றுவது என்றால் அமைச்சவை பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். அங்கு அனுமதி பெற வேண்டும். திறைசேரியிலும் பொது நிர்வாக சேவையிலும் அனுமதி பெற வேண்டும். இவை அனைத்தும் உடனடியாக நடந்து விடாது. அதற்கு இன்னும் சில காலம் பொறுத்திருந்தால் இவர்களின் அனைத்து கோரிக்கைகளும் பயிற்சி முடிவின் பின்னர் நிறைவேறும்.

நான் கல்வி இராஜாங்க அமைச்சராக வந்த பிறகு இவர்களின்நியமனத்தை போராடிப் பெற்றுக் கொடுத்தேன். அதேபோல் இவர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன். இவர்களின் நலன் கருதி தற்போது கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பல்வேறு வளர்ச்சிப் படிகளை நோக்கிச் செல்கின்றது. இதன் அபிவிருத்திக்காக 2 கோடியே 50 லட்சம் ரூபாநிதி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது.

அதேபோல் இலங்கையில் உள்ள ஏனைய ஆசிரியர் கலாசாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரயில்வே திணைக்களத்தில் பெண்களுக்கு இடமில்லை!

ரயில் திணைக்களத்தில் பணியாற்றும் பெண்களை வேறு திணைக்களங்களுக்கு மாற்றுவதற்கு அமைச்சரவையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்ட விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தைச் சார்ந்து, திணைக்களங்களின் செலவீனங்கள் குறித்த விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்றது.

வெளிவிவகார, மூலோபாய அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்கள் இதில் பிரதான அங்கம் வகித்தனர்.

இதன்போது, பல்வேறு சந்தர்ப்பங்களில் ரயில்வே திணைக்களத்தில் தற்காலிகமாக இணைத்துக்கொள்ளப்பட்ட சுமார் இரண்டாயிரம் ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா என்று நாடாளுமன்ற உறுப்பினர்சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பி னார். அதில் 468 பெண்கள் தினக் கூலிகளாகப் பணியாற்றுகின் றனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ரயில்வே திணைக்களத்தில் பெண்களுக்குக் கடுமையான பணிகள் வழங்கமுடியாதுள்ளது எனவும் கூறினார்.

அப்படியானால் அவர்கள் எதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் அவர்களது எதிர்காலம் என்ன வாகும் என்றும் ஹந்துன்னெத்தி பதில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா- ரயில்வே திணைக்களத் தில் பணியாற்றும் பெண்களை வேறு திணைக் களங்களுக்கு மாற்றவும் இதனால் உருவாகும் வெற்றிடங்களுக்கு வேறு திணைக் களங்களில் பணியாற்றும் ஆண்களை இணைத்துக் கொள்ளவும் அமைச்சரவை அனு மதியளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# .பொம்மைவெளி பகுதியிலிருந்து பழைய ஆயுதங்கள் சில மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ். பொம்மைவெளி பகுதியிலிருந்து பழைய ஆயுதங்கள் சில நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் பழைய ஏ.கே ரி 56 - 2 ரக துப்பாக்கிகள் 10 மற்றும் 6 எம்.எம் மோட்டார் குண்டுகள், ரி.56 ரவைகள் உட்பட கைக் குண்டுகள், வாள்கள், மகசின் 4 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள்கைவிடப்பட்ட நிலையில் கிடந்தமையை அவதானித்த பொது மக்கள் இது தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து இந்த ஆயுதப் பொருள்களை மீட்டுக் கொண்டு சென்றனர்.



## இரங்கல் செய்தி



**லயன் செல்லத்துரை மகாதேவா**

அவர்கள் நேற்றைய தினம் சடுதியாய் அமரராகிவிட்டார் என்ற செய்தி இடியாய் வந்து இறங்கியது. இத்தனை சீக்கிரத்தில் இந்த மனிதர் எம்மிடமிருந்து விடைகொள்வார் என்று யாருமே நினைத்திருக்கவில்லை. நாடறிந்த சேவையாளராய் நல்லதோர் குடும்பத்தலைவராய் வாழ்வாங்கு வாழ்ந்த மகா தேவா அவர்கள் எமது வாழ்வக நிறுவனத்தோடும் மிக நெருக்கமான கேண்மை பூண்டொழுகி வந்தவராவார். எமது பொதுச்சபை, நிர்வாக சபைகளின் அங்கத்தவராகவும் வாழ்வக நிறுவனத்தின் கௌரவ செய லாளராகவும் பணியாற்றிய இவர், வாழ்வகத்தின் வளர்ச்சியில் எப்போதுமே அதீத ஈடுபாடு காட்டி வந்திருக்கிறார். எம்மைப் பொறுத்தவரை லயன் மகாதேவா அவர்களின் திடீர் மறைவானது எவ்வகையிலும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது இரு புதல்வர்கள், புதல்வி, மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவுகளுடன் நாமும் இணைந்துகொள்கின்றோம். நொந்துபோன நம் இதயங்களைக் காலம் ஆற்றட்டும். கடவுள் நம்மைத் தேற்றட்டும்.

**வாழ்வக சமூகம்**, சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

## விழிநீர் சொரிய...



தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்

**லயன் செ.மகாதேவா J.P**

அவர்களின் மறைவு எமது வைத்திய சாலைக்கு பேரிழப்பாகும். எமது வைத்தியசாலையின் அவரது மனைவி **லயன் பூமாதேவி மகாதேவா** ஞாபகார்த்தமாக துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைத்துத் தந்ததுடன் பல்வேறு அபிவிருத்திக்கும் உதவி வருபவர். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நோயாளர் நலன்புரி சங்கம்,**
**ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.**

# மரண அறிவித்தல்



## லயன் செல்லத்துரை மகாதேவா MJF, J.P.

(முன்னாள் முகாமையாளர் - சுன்னாகம் பலநோக்குச் சங்கம்; வழி நடத்துநர்- இலங்கை போக்குவரத்துச் சபை; தனியார் போக்குவரத்துச் சபை முன்னாள் உரிமையாளரும் தலைவரும்; அங்கத்துவப் பணிப்பாளர் - சுன்னாகம் லயன்ஸ் கழகம்; பிரதம இணைப்பாளர் - ஆளுநர் சபை, லயன்ஸ் கழகம் 306B1, நிர்வாக சபை உறுப்பினர் - நோயாளர் நலன்புரி சங்கம், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை; உப தலைவர் - தெல்லிப்பழைத் தமிழ்ச்சங்கம்; போசகர் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச் சங்கம்; முன்னாள் செயலாளர் - வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லம்; தலைவர் - தெல்லிப்பழை மேற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்; தலைவர் - கந்தரோடை சுப்பிரமணியம் வாசிகசாலை, அகில இலங்கை சமாதான நீதவான், சமூகசேவையாளர்)

**மலர்வு:**
**19★11★1944**

**உதிர்வு:**
**24★11★2017**

கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன் செல்லத்துரை மகாதேவா கடந்த (24 -11 -2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சீவநாயகம் தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லயன் பூமாதேவியின் பாசமிகு கணவரும், ம.பிருந்தாவன் (சுதன் – லண்டன்), திருமதி வி.பிரியதர்ஷினி (லண்டன்), லயன் ம.பிரிதிவிராஜா (ராஜன் – லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பி.சிவனேஸ்வரி (லண்டன்), ச.விஷ்ணுகாந்தன் (லண்டன்), திருமதி பி.பவித்திரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பி.சர்விகா, பி.கோவரசன், வி.ஜஸ்வீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கந்தரோடையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கன்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்**
**(லண்டன்)**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.